REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
92 ANNIVERSARY

வரு. 92 இல. 99 | Friday 26, April, 2024 | 20பக்கங்கள் | 50/-


## தினகரன் வாரமஞ்சரியுடன் அரச வர்த்தமானி வெளியீடு



2024/ 2025 கல்வி ஆண்டுக்காக உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகங்களுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் உட்பட இலங்கை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தல் அதிகாரிக்கான 06






## இலங்கை, ஈரான் ஜனாதிபதிகளுக்கிடையே சந்திப்பு



# இலங்கையின் எதிர்கால முன்னேற்றம், சுபீட்சம் குறித்து ஈரானிய ஜனாதிபதி வலுவான நம்பிக்கை

### இலங்கை, ஈரானுக்கு இடையே ஐந்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்து

### இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், கடன் மறுசீரமைப்புக்கும் ஈரான் அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு இலங்கை ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் (24) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் சிநேகபூர்வமாக வரவேற்றார். இதன்போது ஈரான் அதிபருக்கு முப்படையினரின் 21 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டு மரியாதை அளிக்கப்பட்டது.

இருநாட்டு ஜனாதிபதிகளும் இரு நாடுகளின் தூதுக்குழுவை அறிமுகப்படுத்திய பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழுவினரை ஜனாதிபதி அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

தனது விஜயத்தை குறிக்கும் வகையில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஜனாதிபதி அலுவலகத்தின் சிறப்பு விருந்தினர் புத்தகத்தில் நினைவுக்குறிப்பை பதிவிட்டார். தலைவர்களுக்கிடையிலான சுமூகமான கலந்துரையாடலின் பின்னர் இருதரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஈரானுக்கும் இலங்கைக்குமிடையிலான முறையான இராஜதந்திர உறவுகள் 1962 இல் ஆரம்பிக்கப்பட்டது. முறையான இராஜதந்திர உறவுகளை நிறுவுவதற்கு முன்பே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முன்னெடுக்கப்பட்டன. முந்தைய பாரசீக காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முக்கியமாக ஹோமூஸ் ஜலசந்தி வழியாக நடத்தப்பட்டன. ஈரான் தனது தூதரகத்தை 1975 இல் கொழும்பில் நிறுவியது.

இலங்கை தனது தூதரகத்தை தெஹ்ரானில் ஜனவரி 1990 இல் நிறுவியது. இரு நாடுகளும் அனைத்து 06






GCE O/L பரீட்சை 06ஆம் திகதி ஆரம்பம்

## மேலதிக வகுப்புகள் 30ஆம் திகதி நள்ளிரவு நிறைவடைய வேண்டும்

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு



கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை நடைபெறவுள்ளதால், இப்பரீட்சையை இலக்காக கொண்டு நடத்தப்படும் மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் எதிர்வரும் 30ஆம் திகதி நள்ளிரவு 12.00 06

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில்

## அரச வருமான இலக்குக்கு அப்பால் 6% வளர்ச்சியை எட்ட முடிந்துள்ளது

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



இந்த வருடத்தின் முதல் காலாண்டில் அரச வருமானம் 834 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்திருப்பதாகவும், இது எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்திற்கு மேலதிகமான 6% வளர்ச்சியாகும் எனவும் அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் 06

ரூ. 1,000 மில்லியன் நட்டஈடு கோரி

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அமைச்சர் அமரவீரவுக்கு கடிதம்

### நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாக தெரிவிப்பு



ஊடகங்கள் மூலம் வெளியிட்ட அறிக்கையினால் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டமைக்கு இழப்பீடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு 06

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி

## 04 மாதங்களில் 1,371 முறைப்பாடுகள்; 53 கோடியே 5,009,520 ரூபா பணம் மீட்பு



வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவுக்கு இந்த வருடத்தின் நான்கு மாதங்களில் 1,371 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அப்பணியகம் தெரிவித்துள்ளது.

முறையான அனுமதியின்றி வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல், சரியான வேலை உத்தரவு இல்லாமல் வெளிநாட்டு வேலைகளை வழங்குவதற்காக 06

### காலத்துக்கு ஏற்ற சவால்களை

## சமாளிக்கக்கூடிய நபரை தேர்தலில் SLPP நிறுத்தும்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது கட்சியிலிருந்து பொருத்தமான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் 06

சபை அமர்வுகளில் பங்கேற்காமலிருக்க

## இரா. சம்பந்தன் எம்.பி.க்கு மூன்று மாதகால விடுமுறை

### பாராளுமன்றம் நேற்று அனுமதி

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற அமர்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பங்கேற்காமலிருக்க மேலும் 06

### இலங்கையில் உள்நாட்டு

## கடற்றொழில்துறையை வலுப்படுத்த ஜப்பான் 03 மில். டொலர் நிதி உதவி

### ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து




இலங்கையில் உள்நாட்டு கடற்றொழிலை வலுப்படுத்தவும் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மூலம் 03 மில்லியன் அமெரிக்க டொலரை ஜப்பான் வழங்கியுள்ளது.

கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து இந்த நிதி உதவி 06

## தங்கத்தின் விலையில் நேற்று திடீர் சரிவு

### 22 கரட் 173,000 ரூபாவாக பதிவு



தங்கத்தின் விலை நேற்று சற்று குறைவடைந்துள்ளது. இதற்கமைய நேற்றுக் காலை 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 1,73,000 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

இதேவேளை 24 கரட் கொண்ட ஒரு பவுண் தங்கத்தின் விலை 188,000 ரூபாவாக பதிவாகியுள்ளது.

கொழும்பு, செட்டியார்தெருவில் 22 கரட் கொண்ட ஒரு பவுண் 06

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து

## பேராயரின் குற்றச்சாட்டுகளை கோட்டாபய ராஜபக்ஷ மறுப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் முன்வைத்துள்ள நான்கு பிரதான குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி 06

## மரண அச்சுறுத்தல் விடுத்தமைக்கு எனக்கு நீதியை பெற்றுத்தாருங்கள்

### சபையில் சபாநாயகரிடம் வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



தமக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தவர்கள் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் 06

### சிவனொளிபாதமலையிலிருந்து பாய்ந்து

## காணாமல் போன இளைஞர் ஆறு நாட்களின் பின் உயிருடன் மீட்பு

ஹட்டன் விசேட நிருபர்



சிவனொளிபாதமலை உச்சியிலிருந்து பாய்ந்ததாக தேடப்பட்டு வந்த இளைஞர் ஆறு நாட்களின் பின்னர் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

# நகர்வலம்



# வழக்குப் பொருட்களான போதைப் பொருட்கள் நவீன முறையில் மாதாந்தம் அழிக்க நடவடிக்கை

## அடுத்த மாதம் முதற்கட்டமாக 300 கிலோ அழிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வழக்குப் பொருட்களாக வைக்கப்படும் போதைப் பொருட்களை மாதா மாதம் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி, அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார் .

அந்த வகையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் முதல் கட்டமாக 300 கிலோ போதைப்பொருள் கொழும்பு வனாத்தவில்லு பகுதியில் அடுத்த மாதம் அழிக்கப்படும் என சபையில் தெரிவித்த அவர், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதற்காக 18 மில்லியன் ரூபா செலவில் அந்தப் பகுதியில் விசேட இயந்திரங்கள் பொருத்தப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், அடுத்த மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக இவ்வாறு வழக்குப் பொருட்களாக நீதிமன்றத்திற்கு வரும் போதைப் பொருட்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

வழக்குப் பொருட்களாக நீதிமன்ற களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ள போதைப்பொருட்களை பாதுகாப்பது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த போதைப்பொருட்களை முறையற்ற வகையில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் நீதிமன்ற பணியாளர்கள் பலர் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

வழக்குப் பொருட்களாக பெருமளவிலான போதைப்பொருட்களை நீதிமன்ற களஞ்சியசாலைகளில் வைத்திருப்பது பயனற்றது.

நீதிமன்ற விசாரணைக்கு ஐந்து கிராம் போதைப்பொருள் அளவில் மாதிரிகளை சாட்சியப் பொருளாக வைத்து விட்டு ஏனையவற்றை அழிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

அதே வேளை, பொது மக்கள் வாழும் அல்லது நடமாடும் பகுதிகளில் இத்தகைய அபாயகரமான போதைப்பொருட்களை அழிக்க முடியாது.

அதற்கு அனுமதி வழங்கவும் முடியாது என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய வனாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்குசொந்தமான இடத்தில் இந்த போதைப்பொருட்களை அழிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துக்கு அமையவே போதைப்பொருட்களை அழிக்க வேண்டும்.

அதற்கான இயந்திரத்தை பொருத்துவதற்கு 18 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.அந்த நடவடிக்கைகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளன.

அந்த வகையில் முதலாவது கட்டமாக அடுத்த மாதம் 300 கிலோ போதைப்பொருள் அழிக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# துபாயில் பட்டமளிப்பு விழா ஹாஷிம் உமர் பிரதம அதிதி



ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள கற்றல் கல்வி மேலாண்மை மையம் நடத்தும் கற்றல் கல்வியின் கலைப் பண்பாட்டு திருவிழாவும் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் மே மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 03 மணிக்கு மேற்படி மையத்தின் ஸ்தாபகர் முனைவர் மு.ரா.ரோகினி தலைமையில் நடைபெறும்.

டுபாய் Bits pilani உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமரும் சிறப்பு அதிதிகளாக இனிய நந்தவனம் மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், டுபாய் தொழிலதிபர் அப்துல் வாஜித் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிலையில் ஹாஷிம் உமர் தலைமையிலான குழு மே 03ஆம் திகதி டுபாய் பயணமாகின்றது.

# இளைஞனை காணவில்லை



அக்குறணையைச் சேர்ந்த 24 வயதுடைய முஹம்மத் றியால் என்பவர் கடந்த சில மாதங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார்.

கடந்த (2023) ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி தொழில் ஒன்றைத் தேடி கொழும்பு சென்ற இவர், தற்போது எங்கிருக்கின்றார் என்பது பற்றி இதுவரை தெரியாதுள்ளதாக குடும்பத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடைசியாக இவர் கொழும்பில் இருந்து 011 2121087 என்ற இலக்கத்தில் தனது வீட்டுக்கு கதைத்துள்ளார். கொழும்பிலிருந்து இன்னும் ஒரு மாதத்தில் வீட்டுக்கு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால், அவர் தொடர்பாக எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. இவர் பற்றி யாராவது தகவல் தெரிந்தால் 0777312421 என்ற தொலைபேசி இலக்கத்தை உடையவரான ஹில்மி அஹமத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு குடும்பத்தவர்கள் கேட்டுள்ளனர். (எம்.எஸ்.எம். ஸாகிர்)

# லலித் அத்துலத்முதலியின் 31ஆவது நினைவு தினம்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



மஹபொல புலமைப் பரிசில் நிதியத் திட்டத்தின் முன்னோடியான மறைந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் 31ஆவது நினைவு தின நிகழ்வு கொழும்பு தெர்ஸ்டன் சுற்று வட்டத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலை வளவில் அனுஷ்டிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்ரணி ராசிக் ஸரூக், ஹர்ஷ அபேவர்தன உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். இரத்மலானை அபிவிருத்தி மன்றம் மற்றும் லலித் அத்துலத் முதலி நினைவு மன்றத்தின் தலைவருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கேசரலால் குணசேகரவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

# கொழும்பு ஈரான் கலாசார நிலைய நிகழ்வில் ஈரான் குழுவினர் பங்கேற்பு









**ருஸைக் பாரூக்**

இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மனைவி *Jamileh Alamolhoda* புதன்கிழமை மாலை கொழும்பில் உள்ள ஈரான் கலாசார நிலையத்தில் நடைபெற்ற சர்வ மத நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஈரான் கலாசார நிலையத்தின் கவுன்சிலர் டாக்டர். மொஸாமி குடார்சி *Jamileh Alamolhoda*வை வரவேற்றார்.

அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழக தலைவர் அயத்துல்லா டாக்டர் அலி அப்பாஸி மற்றும் அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் இலங்கை பிரதிநிதி ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் செய்யத் ஜெய்னுல் ஆபிதீன் மிர்பதேமி ஆகியோரும் கலந்து கொண்டனர்

மேலும் கொழும்பு இசிபத்தனாராம விகாரையின் பிரதம குரு வண. கலாநிதி மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் மெதடிஸ்ட் தேவாலயத்தின் திருத்தந்தை அனுர பெரேரா, இந்து மதகுருமார் சம்மேளனத்தின் செயலாளர் சிவசிறி தர்ஷக சர்மா குருக்கள், கொழும்பு கிழக்கு ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். பிர்தௌஸ், கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் றிஸான் ஹுஸைன் உட்பட பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்கள் கலந்து சிறப்பித்தனர்.



கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்றைய தினம் (25) கொழும்புக்கு வருகை தந்த பேருவளை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மூன்றாம் வகுப்பு மாணவிகள், லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் ஆசிரியர்கள் சகிதம் முன்றலில் எடுத்துக்கொண்ட படம். **(படம் ; சுதத் நிசாந்த)**

# மோ. சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்ற கமால்தீன் ஹம்தான்

## அலிசப்ரி ரஹீம் எம்.பி நேரில் சென்று வாழ்த்து

**புத்தளம் தினகரன் நிருபர்**



*Fox Hill Super Cross* 2024 போட்டியில் 125 CC மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற புத்தளம் கொத்தாந்தீவைச் சேர்ந்த கமால்தீன் ஹம்தானை நேரில் பாராட்டும் முகமாக அவரது இல்லத்திற்கு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேரில் சென்று (24) தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களை பாராட்டும் நிகழ்வை கூடிய விரைவில் புத்தளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.





பேருவளை சீனன்கோட்டை நவ்பல் ஜாபிர் மாவத்தை இப்ராஹீமிய்யா சாதுலியா ஸாவியாவில் வருடாந்த ஹிஸ்பு கந்தூரி மஜ்லிஸும் ஹிஸ்பு மஜ்லிஸில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு பணப்பரிசு வழங்கும் நிகழ்வும் ஸாவியா இமாம் மௌலவி முஹம்மத் முத்தலிப் (பாரி) தலைமையில் நடைபெற்றது. இதன் போது முகத்தமுஷ் ஷாதுலிகளான ஹாஜி அபுல்ஹஸன், ஹாஜி ஹம்ஸா ஆகியோர் சிறுவர்களுக்கு பணப்பரிசு வழங்குவதைப்படங்களில் காணலாம். **(படங்கள் பேருவளை விசேட நிருபர்)**



சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விளையாட்டு நிகழ்ச்சிகள் மாத்தளை வி.டி. நாணயக்கார பூங்காவில் இடம்பெற்றது. ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம் கலந்து கொண்ட இவ்விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

**படம் மாத்தளை சுழற்சி நிருபர்**

# கிளி மூக்கு சேவல்கள் கண்காட்சி; 50க்கும் மேற்பட்ட சேவல்கள் பங்கேற்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



*Srilanka parrot beak association* இரண்டாவது தடவையாக நடத்திய மாபெரும் கிளி மூக்கு சேவல்களின் கண்காட்சி கடந்த 20 ஆம் திகதி கெகிராவையில் நடைபெற்றது . மேற்படி கண்காட்சியில் நாடு பூராகவும் இருந்து சுமார் 50 இற்கும் மேற்பட்ட கிளிமூக்கு சேவல்கள் இக்கண்காட்சியில் பங்கேற்றிருந்தன.

இதன்போது, கிளி மூக்கு விசிறிவால் கோழி வளர்ப்பாளர்களுடன் பறவை ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்த இக்கண்காட்சியில் பங்கேற்ற சேவல்களுக்கு நினைவுச் சின்னங்களுடன், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இந்தியாவில் மட்டுமே வளர்க்கப்பட்டு வந்துள்ள இச் சேவல் இனம் இன்றளவில் இலங்கையில் நூற்றுக்கணக்கான வளர்ப்பார்களால் ஆர்வத்துடன் இதனை வளர்த்து வருகின்றனர்.

கண்ணைக் கவரும் அழகிய நிறத்துடனும் தோற்றத்துடனும் காட்சியளிக்கும் இச்சேவல் வளர்ப்பானது சிறந்த பொழுதுபோக்காக ஒருபுறம் இருக்க பொருளாதாரம் ஈட்டு வழிமுறையாகவும் இருக்கிறது. இச்சேவல்கள் இலங்கையில் இருந்து பல உலக நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.10
அஸர் - 03.23
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 13
ராகுகாலம் : காலை : 10.29 - 11.59வரை
சுபநேரம் : மாலை : 5.59 - 7.29வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இலங்கையில் வர்த்தக முதலீடுகளை விரிவுபடுத்த சீனா இணக்கம்

## பிரதமருடனான சந்திப்பில் தெரிவிப்பு

மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகன உற்பத்தி, விவசாய தொழில்நுட்பம், காகிதம் மற்றும் அச்சிடுதல் தொடர்பான துறைகளை விரிவுபடுத்த உதவி வழங்கவும் முதலீடுகளை விரிவுபடுத்துவதற்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் சீன சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் சங்கத்திற்கும் (CASMCE) இடையிலான சந்திப்பொன்று நேற்று (25) அலரி மாளிகையில் நடைபெற்றது.



மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகன உற்பத்தி, விவசாய தொழில்நுட்பம், காகிதம் மற்றும் அச்சிடுதல் தொடர்பான துறைகளை விரிவுபடுத்தல் மற்றும் வர்த்தக முதலீடுகள் குறித்து இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமரின் சீன விஜயம் குறித்து சீன மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதாகவும், இந்த வருகைக்கு தனது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் சீன சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் சங்கத்தின் (CASMCE) தலைவர் ரென் சிங்ளே (Ren XINGLEI) தெரிவித்தார்.

இலங்கையில் சூரியசக்தி, காற்றாலை சக்திவளத்துடன் தொடர்புடைய கைத்தொழில் அபிவிருத்தியில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக CASMCE சங்கத்தின் உப தலைவர் சூ சியெங் (XU XIANG ) தெரிவித்தார்.

உயர்தர கறுவாவினை ஏற்றுமதி செய்வதற்கும் இலத்திரனியல் வாகன இறக்குமதிக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் உள்ள சாத்தியக்கூறுகளை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் சீன சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் அதிகாரிகள் உட்பட பல சீன தொழில் முயற்சியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டி அதிகரித்தால்

# அரசு மேலும் 40 பில்லியன் ரூபாவை செலுத்த நேரிடும்

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டியை 15 வீதமாக வழங்க வேண்டுமானால் அரசாங்கம் மேலும் 40 பில்லியன் ரூபாவை அதற்காக செலுத்த நேரிடுமென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நிதி நிலைமையை கவனத்திற்கொண்டு இது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் இதனைக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது கேள்வியின் போது, வங்கி வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான வங்கி வைப்பு வட்டி வீதமும் குறைக்கப்பட்டுள்ளது.

இதனை நம்பி வாழும் அவர்களின் வட்டி வீதத்தை அதிகரித்து வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர்,

"இக்காலத்தில் வங்கி வட்டி வீதம் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டு வங்கி வைப்புக்கான வட்டியை 16 வீதத்திலிருந்து தற்போது தனி இலக்கத்துக்கு கொண்டு வந்துள்ளோம்.

வைப்புகளுக்கான வட்டியை குறைப்பது இயல்பாக இடம்பெறுவதாகும். இது தொடர்பாக சிரேஷ்ட பிரஜைகளும் சில பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இதேவேளை சிரேஷ்ட பிரஜைகள் முகங்கொடுக்கும் மற்றுமொரு பிரச்சினை ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறைவாக பணத்தை வைப்புச் செய்வது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். எனினும் அது சாத்தியப்படவில்லை.

சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புகளுக்கு வட்டி அதிகரிக்க வேண்டியது அவசியம். எனினும் அதற்கான நிதியை அரசாங்கமே ஒதுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான விடயங்களுக்காக ஏற்கனவே வங்கிக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய நிலுவை இன்னும் தொடர்கிறது.

நீண்டகாலமாக இவ்வாறு சிரேஷ்ட பிரஜைகளுக்கு அதிக வட்டியை வழங்க வங்கிகளுக்கு அரசாங்கமே நிதி வழங்கி வந்துள்ளது.

நூற்றுக்கு 15 வீதமாக அதனை வழங்க வேண்டுமானால் சுமார் 40 பில்லியன் ரூபாவை அரசாங்கம் அதற்காக ஒதுக்க வேண்டியுள்ளது. முன்னரை விட அதிகமான நிதியை இப்போது ஒதுக்க நேர்ந்துள்ளது.

அந்த வகையில் நாட்டின் தற்போதைய நிலையைக் கவனத்திற்கொண்டு எவ்வாறு இந்நிலைமையை சரி செய்வது என்பது தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்துகின்றது. இதன் முதற்கட்டமாக அவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ள சலுகைகளுக்கு துரிதமான தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில்

# வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ரியாத் பயணம்



சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் வலுத்திறன் தொடர்பான சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, சவுதி அரேபியாவின் ரியாத் நகருக்கு விஜயம் செய்யவுள்ளார். எதிர்வரும் 28ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை ரியாத்தில் இச்சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

உலகப் பொருளாதார மன்றத்தால் ரியாத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சிறப்புக் கூட்டம், பல்வேறு துறைகள் மற்றும் தொழில்துறைகளைச் சேர்ந்த தலைவர்களை ஒன்றிணைத்து, அன்றைய உடனடித் தீர்வுக்கான மற்றும் சிக்கலான பிரச்சினைகளையொட்டி ஒரு விரிவான உரையாடலை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விஜயத்தின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, "நகர்ப்புற எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்" மற்றும் "வடக்கிலிருந்து தெற்கு, கிழக்கிலிருந்து மேற்கு, நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" ஆகிய இரண்டு அமர்வுகளில் குழு உறுப்பினராக இணைந்து கொள்ளவுள்ளார்.

அதேவேளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், இந்நிகழ்வை ஏற்பாடு செய்த நாடான சவூதி அரேபியா உட்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த தனது சகாக்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்துவாரெனவும், எதிர்பார்க்கப்படுகிறது.

ரியாத்திலுள்ள இலங்கை சமூகத்தினரையும் சந்திக்கவுள்ள அமைச்சர், அங்கு அமைந்துள்ள இலங்கை சர்வதேச பாடசாலைக்கும் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம்

# அமைச்சர் கஞ்சனவினால் நேற்று சபையில் சமர்ப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. வழமையான நடவடிக்கைகளுக்கு பின்னர் அமைச்சர் கஞ்சன விஜேசேகர சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

"மின்சாரத் தொழிற்றுறைக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் தேசிய மின்சார மதியுரை பேரவையை ஸ்தாபிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும் இச்சட்டத்தின் நியதிகளின்படி 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத் தொழிலுக்கான ஒழுங்குப்படுத்துநராக இருப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் இச்சட்டம்மூலம் பரிந்துரைக்கின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான எந்த கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களிலும் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மின்பெறுகை சம்பந்தமான எல்லா செயற்பாடுகளும் உரித்தாக்கப்பட வேண்டுமோ, அந்த கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் கூட்டிணைப்புக்கு ஏற்புடையற்பாலான சட்டவாக்க வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கும் இதில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தொடர்புபட்ட எல்லா செயற்பாடுகளுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டிய செயன்முறைகளை குறித்துரைப்பதற்கும் 1969ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தையும், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தையும் நீக்குவதற்கும் இதன் மூலம் ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதும் இந்த சட்டமூலத்தின் நோக்கமாகும்" என்றார்.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் ஓகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு

## சபையில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் வருமானத்துக்கு அதிகளவு பங்களிப்பை வழங்கும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் அதனை நடைமுறைப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மோட்டார் வாகன சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்துக்கமைய மோட்டார் வாகன தற்காலிக அனுமதிப்பத்திரத்துக்கான அனுமதிக்காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான இரண்டு வர்த்தமானி அறிவித்தல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நாட்டின் அரச வருமானத்துக்கு பாரிய நிதி பங்களிப்பை வழங்குகிறது.

அதேபோன்று அரச வருமானத்தில் சுங்கம், தேசிய வருமானவரி திணைக்களம், கலால் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் ஆகியன நீண்டகாலமாக பாரிய பங்களிப்புகளை வழங்கி வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் எச்.ஈ.பாஹிம் அல் அஸீஸை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மக்கார் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார். கல்வி மற்றும் கலாசார உறவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக அவர்கள் இருவரும் விரிவாக கலந்துரையாடினர்.

இனிவரும் காலங்களில்

# QR குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டைகள்

தற்போது நடைமுறையிலுள்ள தேசிய அடையாள அட்டையை விட சிறந்த அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அதற்கான கேள்விமனு கோரப்பட்டு, தற்போதுள்ள தேசிய அடையாள அட்டையில் பார் குறியீடு நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய புதிய அடையாள அட்டை விரைவில் வழங்கப்படுமெனவும், அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள 340 இடங்கள் உள்ளதாகவும்,அவர் கூறினார். அரசாங்கத்துக்கு நிதிப் பிரச்சினை இருப்பதாகவும் ஆனால் மக்களுக்கு சேவைகளை வழங்க நாடு முழுவதும் பல அலுவலகங்கள் திறக்கப்படுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி

# சட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சர் மனுஷ பணிப்பு



வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி மோசடியான முறையில் பணம் சம்பாதிப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று (24) பணித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு பணித்துள்ளார்.

இந்த தவறான விடயத்தை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்த தேவையான வசதிகளை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் மேலும் தெரிவித்த அமைச்சர், அநுராதபுரத்தை அண்மித்த இடத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் பௌத்தபிக்கு ஒருவரும் வெளிநாட்டு வேலை பெற்றுத்தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

06

# நுவரெலியாவில் இலங்கையின் முதலாவது ஸ்ரொபெரி உற்பத்தி மாதிரி கிராமம் ஆரம்பம்

இலங்கையின் முதலாவது ஸ்ரொபெரி உற்பத்தி மாதிரிக்கிராமத்தை நுவரெலியாவில் ஆரம்பிப்பதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நுவரெலியாவில் 40 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி, ஸ்ட்ரொபெரி செடிகள், புதிய தொழில்நுட்பம் மற்றும் நீர் விநியோக வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த உற்பத்திக்காக விவசாயி ஒருவருக்கு சுமார் 13 இலட்சம் ரூபா செலவாகும் என்றும் அதில் 07 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் மீள அறவிடாத வகையில் வழங்கப்படவுள்ளது. எஞ்சிய 06 இலட்ச ரூபா செலவை இந்த உற்பத்தியை மேற்கொள்வோர் ஏற்க வேண்டும்.

ஸ்ட்ரொபெரி உற்பத்திக்காக பொருத்தமான 40 வீட்டுத் தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட உற்பத்திக்கு உட்பட்ட வீடுகள் அனைத்தையும் ரிமோட் கண்ட்ரோல் மூலம் முழுமையாக தானியக்கமாக மேற்கொள்ள முடியும் என்றும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு

# இடைக்கால தடை உத்தரவுக்கான வழக்கு ஜூன் 20க்கு ஒத்திவைப்பு

## யாழ். மாவட்ட நீதிமன்றம் அறிவிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு தொடர்பான வழக்கு நேற்று (25) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐந்தாவது பிரதிவாதியான சண்முகம் குகதாசன் நேற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்போது முதலாம் மற்றும் மூன்றாம் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா, தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைக்க கால அவகாசம் கோரினார்.

இதனையடுத்து பிரதிவாதிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்க அவகாசம் வழங்கி ஜூன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றதை தொடர்ந்து வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.கா.வின் மே தின கூட்டம் கொட்டகலையில்!

## கட்சி உயர்மட்ட குழுவில் தீர்மானம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் இம்முறை கொட்டகலை பொது மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இ.தொ.கா.வின் உயர்மட்ட குழு நேற்று வியாழக்கிழமை தலைமை காரியாலயமான சௌமியபவனில் கூடி இந்த முடிவை எடுத்தது.

இந்தக் கூட்டத்தின் போது இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும்

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


குரோதி வருடம் சித்திரை மாதம் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 17

## குறள் தரும் சிந்தனை



எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.

# பொருளாதார மேம்பாட்டுக்கு பக்கத்துணையாகும் அறிவிப்பு

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்றாஹீம் ரைசி நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் செய்தார். 16 வருடங்களின் பின்னர் ஈரான் நாட்டில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்த ஈரானிய ஜனாதிபதி என்ற கௌரவத்தை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின் போது இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கக்கூடிய பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக விளங்கும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அவர் திறந்து வைத்திருக்கிறார்.

இரு நாடுகளதும் இராஜதந்திர உறவில் வரலாற்றுத் தடம் பதிக்கும் இவ்வைபவத்தில் உரையாற்றிய ஈரானிய ஜனாதிபதி, 'இலங்கையுடன் சிறந்த ஒத்துழைப்போடு முன்னோக்கிச் செல்லவும் இலங்கையின பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவவும் தயார்' என்று அறிவித்தார்.

அதேநேரம் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னோக்கி செல்வதே எமது நோக்கம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேசிய வைபவத்தில் உரையாற்றிய இரு தலைவர்களதும் இந்த அறிவிப்புக்கள் இருபக்க நட்புறவை மேலும் வலுப்படுத்தி பலப்படுத்தும். அத்தோடு இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு சாதகமான சூழலையும் வாய்ப்புக்களையும் இந்த அறிவிப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கும்.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு, கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கிறது. இவ்வாறான ஒரு பொருளாதார வீழ்ச்சிக்கு இந்நாடு இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முகம்கொடுத்திடக் கூடாது. அதற்கு எந்த வகையிலும் இடமளிப்பதில்லை என்பதில் உறுதியாக உள்ள இலங்கை, நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு அனைத்து பொருளாதார வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில்தான் ஈரான் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு முன்வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இலங்கையின் பொருளாதார முன்னேற்றங்களுக்கு ஈரான் ஜனாதிபதியின் அறிவிப்பு பக்கபலமாகவும் உந்துசக்தியாகவும் அமையும்.

இன்றைய காலகட்டத்தில் எந்தவொரு நாட்டினதும் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகள் இன்றியமையாததாகும். அந்த வகையில் இந்த இரண்டு ஒத்துழைப்புக்களும் ஈரானிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கப் பெறுவதானது இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் நிச்சயம் உத்வேகத்தை ஏற்படுத்தும்.

அதேநேரம் இரு ஜனாதிபதிகளதும் முன்னிலையில் முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சுற்றுலா, ஊடகம், திரைப்படத்துறை, கூட்டுறவுத்துறை, அறிவியல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இளைஞர் மற்றும் விளையாட்டு, நூலகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு ஆகிய துறைகள் தொடர்பில் இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பக்கபலமாக இருக்கும். குறிப்பாக 2022 இல் இலங்கைக்கு அதிக சர்வதேச உல்லாசப் பயணிகள் வருகை தரும் பட்டியலில் ஈரான் 27 வது இடத்தை பிடித்திருந்தது. இது முன்னைய வருடத்தை விடவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். 2023 ஆம் ஆண்டில் 5,973 ஈரானிய உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தந்துள்ளதாக உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான சூழலில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறை மேம்பாட்டுக்கு பெரிதும் உதவக்கூடியதாக அமையும்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு 1962 ஆம் ஆண்டில் ஆரம்பமான போதிலும் இரு நாட்டுக்கிடையிலான உறவு பாரசீக காலம் முதல் ஹொர்மூஸ் நீரிணை ஊடாக இடம்பெற்று வந்திருப்பதாக வரலாறுப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

ஈரான் 1975 இல் கொழும்பில் தமது தூதரகத்தை திறந்த அதேநேரம், இலங்கை 1990 இல் தெஹ்ரானில் தமது தூதரகத்தை தொடங்கியது. இதன் ஊடாக இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வலுபெற்று வளர்ச்சி பெற்றுவரும் சூழலில் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

ஆகவே இரு நாட்டு தலைவர்களதும் அறிவிப்பு இந்நாட்டின் பொருளாதார சுபீட்சத்தில் துரித மறுமலர்ச்சிக்கு வித்திடும் என உறுதிபடக்கூறலாம். அதுவே நாட்டின் மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை - ஈரான் இடையே நிலவும் நீண்டகால உறவுகள்



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆகிய இருவரும் கலந்து கொண்ட நிகழ்வில் உமா ஓயா திட்டம் மக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டமை, இலங்கை_ஈரான் உறவுகளில் ஒரு திருப்புமுனையாகும்.

பாரசீகம் (இப்போது ஈரான்) குறிப்பிடத்தக்க வரலாற்று மற்றும் கலாசார சாதனைகளைக் கொண்ட ஒரு புகழ்பெற்ற நாடாக இருந்தது. இது உலகின் பழைமையான இடமாகும்.

இஸ்லாமிய ஆட்சி முறையிலும் சமூகத்திலும் அவர்கள் பெருமளவில் உள்வாங்கப்பட்டனர்.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலத் தொடர்புகள் உள்ளன.

கி.பி. 550 அளவில் ஈரானிய கடல்வழி வணிகர்கள் கிறிஸ்தவ குடியேற்றங்களின் மையமாக இருந்தனர். 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீன பௌத்த யாத்ரீகரான ஃபாக்ஸியன் இலங்கையில் கிழக்கு ஈரானிய அல்லது சோக்திய வணிகர்கள் இருந்ததாக சான்றளித்தார்.

இஸ்லாமின் எழுச்சிக்கு முந்திய நூற்றாண்டில், பாரசீகர்கள் இந்தியப் பெருங்கடலில் வணிக நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களின் வணிகர்கள் இந்தியா மற்றும் இலங்கையின் (மாந்தை) துறைமுகங்களுக்கு அடிக்கடி செல்லும் நுழைவு வணிகத்தில் உறுதியாக வேரூன்றியிருந்தனர். அரேபியர்களை விட முன்னதாகவே அவர்கள் சீனாவுடனும் தூரக்கிழக்கு நாடுகளுடனும் வர்த்தகம் செய்தனர். இக்காலப்பகுதியாகும் போது இலங்கை சர்வதேச வர்த்தக மற்றும் வர்த்தக முறைமையில் உறுதியான இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை ஒரு வர்த்தக உற்பத்தி மையமாக இல்லாவிட்டாலும், பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோக மையமாகவும், இந்து சமுத்திரத்தில் ஒரு முக்கிய கடற்படை மையமாகவும் மாறியது. இரத்தினக்கல்கள், முத்துக்கள், தந்தம், இலவங்கப்பட்டை போன்ற செல்வச் செழிப்புடன் இலங்கை இருந்ததால் வெளிநாட்டு வணிகர்களை ஈர்த்தது. இதற்கிடையில் இலங்கை பாரசீகத்திலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தது. இலங்கையிலிருந்து மிகவும் கவர்ச்சிகரமான பொருட்கள் முத்துக்கள் மற்றும் விலையுயர்ந்த கற்கள் ஆகும்.

இலங்கையர்கள் முத்து, இரத்தினக்கல் போன்றவற்றை கண்டுபிடிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதால், வளைகுடா பிரதேசத்தில் முத்து மீன்பிடியில் பல இலங்கையர்களை ஈரான் ஈடுபடுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது. வரலாற்றாசிரியர் இப்னு மிஸ்கவைத், இலங்கை மன்னரின் பல பிரதிநிதிகள் விலைமதிப்பற்ற பரிசுப் பொருட்கள், முத்து, யானைகள் போன்றவற்றால் செய்யப்பட்ட தேக்குமரத் துண்டுகளுடன் பாரசீகத்திற்கு விஜயம் செய்ததாக வெளிப்படுத்தியுள்ளார்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், கிழக்கு ரோமுடன் மேலாதிக்கத்திற்கான இடைவிடாத போர்களால் சோர்வடைந்திருந்த பாரசீகம் பைசாந்தியப் பேரரசு மற்றும் பைசாண்டியத்தின் அபிசீனிய கூட்டாளி இருப்பினும், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம், ஈரானிய ஏகாதிபத்திய அதிகாரம் அதன் மேலாதிக்கத்தை வலுப்படுத்தியது. மேலும், ஈரான் பழைய பஹ்லேவி எழுத்து முறைக்குப் பதிலாக அரபு எழுத்து முறையைப் பின்பற்றியது.

அரபுமயமாக்கல் செயற்பாடுகளின் முன்னேற்றத்துடன் இலங்கையில் ஈரானிய செல்வாக்கு மறைந்துவிடவில்லை.

பிரிட்டிஷ் காலத்தில் ஷியா வற்புறுத்தலின் இந்திய இராணுவ வருகைகள் பஞ்சா விழாவின் முஹர்ரம் நிகழ்வுகளைக் கொண்டாடுவது போன்ற பல ஈரானிய நடைமுறைகளை வலுப்படுத்தின. மேலும், அண்மையில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மலாய் இலக்கியப் பிரதிகளில் அலி பாத்திமாவுடன் திருமணம் செய்து கொண்டதைக் குறிக்கும் கணிசமான இலக்கிய வகைகளும், பாரசீக மொழியிலிருந்து மலாய் மற்றும் அரபுதமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பிற காவிய நூல்களும் உள்ளன.

ஈரானிய இலக்கியத்திற்கும் உள்ளூர் இலக்கியத்திற்கும் இடையிலான இலக்கிய தொடர்பு என்பது இஸ்லாம் குறித்த எதிர்கால அறிஞர்கள் ஆராய்ந்து விரிவுபடுத்த வேண்டிய ஒரு விடயமாகும்.

பி. ஏ. ஹுசைன்மியா

# கல்முனை கல்விப்புலத்திலிருந்து விடைபெறும் ஆளுமைகள் ஐவர்

கல்முனை பிரதேச கல்விப்புலத்திலிருந்து ஒரேதடவையில் ஐவர் விடைபெறுவதென்பது நிரப்பமுடியாத இடைவெளியாகும். கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். சாஜித், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்த ஆங்கில பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலீக் ஆகிய மூன்று கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் இடமாற்றம் பெற்றுள்ளனர். மேலும், விவசாய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் சீ.செல்வராஜா, விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.சஹ்துல் அமீன் ஆகிய இருவரும் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றனர்.

ஐவருக்குமான விடைபெறும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு 2016 இல் இடமாற்றம் பெற்று வந்த பிரதிக் கல்லிப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிந்தவூர் மற்றும் கல்முனை கோட்டங்களின் பணிப்பாளர் பதவிகளை கடந்த எட்டு வருடங்களாக வகித்துள்ளார். இவர் கல்முனை வலயத்தின் கல்வி அவிருத்திக்காக பெரும் பங்காற்றியுள்ளார். இவர் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக 2018 இல் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைந்த என்.எம்.ஏ.மலீக் தகவல் அறியும் அதிகாரி, சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் எனப் பல பதவிகளை வகித்தவர். ஆங்கிலப் பாடத்தை மாகாணத்தில் முதலிடத்திற்கு கொண்டு வருவதில் அவர் பெரும்பணி ஆற்றியுள்ளார். சிறப்பான பணி காரணமாக அவர் கிழக்கு மாகாணத்திற்கான உதவிக்கல்விப் பணி்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உடற்கல்விக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராக 2017 இல் கடமையேற்ற யூ.எல்.சாஜித் நிந்தவூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்தார். தடகள விளையாட்டுக்களில் மாகாணத்தில் 2 ஆம் இடத்திற்கு கல்முனை வலயம் மிளிர பாடுபட்டார். கல்முனை வலயத்தில் விளையாட்டுத்துறைகளில் திறமை காட்டிய 500 பேரை கௌரவிக்கும் 'கலர் நைற்' ஒன்றை வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒத்துழைப்புடன் நடத்தினார். அவர் பட்டிருப்பு வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார்.

விவசாயப்பாட ஆசிரிய ஆலோசகரான சீ.செல்வராசா 1998 இல் வீரச்சோலை அரசினர் கலவன் பாடசாலையில் ஆசிரியராக நியமனப் பெற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன், கார்மல் பற்றிமா உள்ளிட்ட பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றி 2012 இல் கல்முனை வலயத்தில் விவசாயப்பாட ஆசிரிய ஆலோசகராக இணைந்து கொண்டார். பாடரீதியான அடைவுமட்ட மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டுள்ளார். 2005 ஆம் ஆண்டு சிங்களப் பேச்சுப் போட்டியில் வலயத்தில் முதலிடம் பெறவும் பணியாற்றியுள்ளார்.

விஞ்ஞானப்பாட ஆசிரிய ஆலோசகரான எம்.எஸ்.சஹுதுல் அமீன் 35 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். 1987இல் மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி, அல்ஹம்றா வித்தியாலயம், கல்முனை அல்ஜலால் மகா வித்தியாலயம், கிண்ணியா குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அர்ப்பணிப்பான பணி ஆற்றியுள்ளார். 1992 இல் இருந்து 2002 வரையான பத்து வருடங்கள் அல்மனாரில் சிறப்பான பணியாற்றினார். கல்முனை கல்வி வலயத்திலிருந்து விடைபெறும் ஐவரினதும் பிரியாவிடை கல்முனை வலயத்திற்கான நிரப்ப முடியாத இடைவெளியாகும் என நிகழ்விற்கு தலைமை தாங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.





ஜெஸ்மி எம்.மூஸா
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# விக்கிலீக்ஸ் வழக்கை அமெரிக்கா கைவிடுமா ?




ஜூலியன் அசாஞ்சே மீதான வழக்கை கைவிடுவது குறித்து அமெரிக்கா தற்போது பரிசீலித்து வருகிறது என ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

விக்கிலீக்ஸ் நிறுவனரான 52 வயதான ஜூலியன் அசாஞ்சேக்கு எதிரான உளவு குற்றச்சாட்டை கைவிட வேண்டும் என்ற அவுஸ்திரேலியாவின் கோரிக்கையை வெள்ளை மாளிகை பரிசீலித்து வருவதாக ஜோ பைடன் கூறியுள்ளார்.

இரகசிய இராணுவ ஆவணங்களை கசியவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டினை அசாஞ்சே 'பத்திரிகை கருத்துச் சுதந்திர செயல்' என்று கூறுகிறார்.

இவ்வருட பெப்ரவரியில், அவுஸ்திரேலியாவின் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஆதரவுடன், அசாஞ்சே தனது சொந்த தாய்நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்து ஒரு பிரேரணையை முன்வைத்தார்.

அமெரிக்காவில் அசாஞ்ஜின் வழக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அவுஸ்திரேலியாவின் கோரிக்கைக்கு அவரிடம் பதில் இருக்கிறதா என்று ஒரு பத்திரிகையாளர் ஜனாதிபதி பைடனிடம் கேட்டார்.

"நாங்கள் அதை பரிசீலித்து வருகிறோம்" என்று அவர் பதிலளித்தார்.

இது குறித்து அசாஞ்சேவின் மனைவி ஸ்டெல்லா "அமெரிக்க ஜனாதிபதியின் வார்த்தைகளின்படி, நேர்மையானதை, சரியானதைச் செய்ய வேண்டும்" என்று பைடனை வலியுறுத்தி உள்ளார்.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச்சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்பட்டால் கருத்துச் சுதந்திரம் என்பது கேள்விக்குறியாகும். 2012 களில் உலகரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவாரா எனும் கேள்விக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் மார்ச் 27 இல் தீர்ப்பு அளித்துள்ளது. 'விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா?' என பிரிட்டிஷ் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதுகுறித்து மூன்று வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டிருந்தார்.

மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களையும் வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவர் மீதான கைதானது, அமெரிக்க அரசின் ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரச இரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது.

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உட்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (Julian Assange) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன.

அமெரிக்க இராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை வேறுமுனையில் திசை திருப்பியது அமெரிக்கா. இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது பிடியாணையை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்த நீண்டகால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே, பிணை விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். 2019 ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன் பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து பொலிசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால், அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது. அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்குத் தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்ததும் அறிந்ததே. இந்நிலையில், கடந்தசில மாதங்களுக்கு முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012 இல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச இரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக மரணித்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டேவருவதும் ஜனநாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும் விசிலூதிகளின் (Whistle Blowers) பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாத்தில் கணவன், மனைவி உறவு

எல்லாம் வல்ல ஏக இறைவன் அல்லாஹ் அளப்பரிய சக்தி மிகுந்தவன். அவன் எந்த ஒரு உயிரினத்தையும் நினைத்த மாத்திரத்தில் படைக்கும் வல்லமை உள்ளவன். அவன் 'ஆகுக' என்று சொன்னால் போதும், அவன் நினைத்த உயிரினம் படைக்கப்பட்டு விடும். அத்தனை வல்லமை மிக்க அல்லாஹ் படைத்தவற்றில் மிகவும் சிறப்பு மிக்க படைப்பு மனிதன்.

இது குறித்து அல் குர்ஆனில், 'மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் வெளிப்படுத்தி உலகில் பரவச்செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் தமக்குரிய உரிமைகளைக் கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் உங்கள் இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். *(4:1)* என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் மனிதனுக்கு வாழ்க்கை துணையாக படைக்கப்பட்ட அவனது மனைவி குறித்தும் அல்லாஹ் அல் குர்ஆனில் இவ்வாறு கூறியுள்ளான்.

'நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன' *(30:21).*

'உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவார்கள். எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளைநிலங்களுக்குச் செல்லுங்கள். உங்கள் ஆத்மாக்களுக்காக முன்கூட்டியே நற்கருமங்களின் பலனை அனுப்புங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மறுமையில் அவனை சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக! *(2:223).*



இறைவன் கூறிய இந்த வழியிலேயே இறைவனின் திருத்தூதராகிய நபி (ஸல்) அவர்களின் மண வாழ்க்கையும் அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்கள் பல திருமணங்களை செய்துள்ளார்கள். இருந்த போதிலும் எந்த நிலையிலும் தங்கள் மனைவிகளில் யாரையும் அவர்கள் புறக்கணிக்கவில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்தினார்கள். அவர்களுக்குரிய மரியாதையை அளித்தார்கள்.

இது தொடர்பில் அஸ்வத் பின் யஸீத் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளதாவது, 'தம் வீட்டாரிடம் இருக்கும்போது நபி (ஸல்) அவர்கள் என்ன செய்வார்கள்?' என்று நான் (அன்னை) ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்டேன். அவர்கள், 'நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளை செய்து கொடுப்பார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால் தொழுகைக்காக எழுந்து சென்று விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

இதுதான் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. தன்னுடைய மனைவியரிடம் அன்போடும் இரக்கத்தோடும் நடந்து கொண்ட அன்னார், அவர்களுடைய வேலைகளில் தானும் பங்கெடுத்துக் கொண்டார்கள். தன்னால் இயன்ற அளவிற்கு மனைவிக்கு உதவிபுரிபவர்களாக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். மனைவிக்கு எந்த சிரமத்தையும் கொடுக்க மாட்டார்கள். மனைவியோடு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். எந்த நிலையிலும் எந்த விதத் தவறான பேச்சையும் பேசமாட்டார்கள்.

அதேநேரம், தான் ஒரு நபி என்ற மமதையோடும் அன்னார் தம் மனைவியருடன் நடந்து கொண்டதும் இல்லை. நான் உங்களில் ஒரு மனிதர் என்ற எண்ணத்தில் தான் நடந்து கொள்வார்கள். தன்னுடைய மனைவிமார்களோடு விளையாட்டாக சில நேரங்களில் நடந்து கொள்வார்கள். மனைவிமார்களை சிரிக்க வைப்பார்கள். அன்போடும் பாசத்தோடும் நடந்து கொள்வார்கள். மனைவிமார்களை சந்தோசமாக வைத்துக் கொள்வார்கள். மனைவியின் ஆசையை நிறைவேற்றி வைப்பார்கள்.

தன்னைச் சுற்றி இருப்பவர்களையும், அதிலும் குறிப்பாக மனைவிமார்களை அன்னார் மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்கள். நபி (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கையில் மனைவியருடன் அன்பும் இரக்கமும் நிறைந்ததாகக் காணப்பட்டது.

இது தொடர்பில் ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, ஒரு தடவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம், 'உன்னுடைய கோபத்தையும், உன்னுடைய திரு ப்தியையும் நான் நன்றாக அறிவேன்' என்று கூறினார்கள். அதற்கு நான், 'அதை எவ்வாறு தாங்கள் அறிந்துகொள்வீர்கள்? அல்லாஹ்வின் தூதரே!' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'நீ திருப்தியுடன் இருக்கும்போது பேசினால், 'ஆம். முஹம்மதுடைய அதிபதி மீது சத்தியமாக' என்று கூறுவாய். நீ கோபமாய் இருக்கும் போது பேசினால், 'இல்லை. இப்ராஹீம் (அலை) அவர்களுடைய அதிபதி மீது சத்தியமாக' என்று கூறுவாய்' என்று சொன்னார்கள். நான், 'ஆம் உண்மை தான். நான் தங்களது பெயரைத்தான் கோபித்துக் கொள்வேன் தங்கள் மீதன்று' என்று கூறினேன் என்றுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய மனைவியான ஆயிஷா (ரழி) அவர்களின் ஒவ்வொரு அசைவையும் பேச்சையும் கூர்ந்து கவனித்து எப்படி புரிந்து வைத்துள்ளார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஆகவே திருக்குர்ஆன் கூறிய வழியிலும், நபிகள் வாழ்ந்து காட்டிய பாதையிலும் கணவன்மனைவி உறவை அமைத்துக் கொள்ள வேண்டும். இது இறைவிசுவாசிகளின் பொறுப்பாகும்.

**அபூ முஷீரா**

# இறையடியானின் மன்றாட்டம்



ரமழானுக்கு பிந்தைய பருவம் ஓர் இறை அடியானுக்கு மிகுந்த தாத்பரியம் உடையது. இறையடியான் ரமழானிய மனிதனாக இருக்கக் கூடாது. அவன் இறைவனை சார்ந்திருக்கும் ரப்பானிய மனிதனாக என்றென்றும் இருக்க வேண்டும் என்பது அறிஞர்களது உபதேசமாகும்.

முன் சென்ற நல்லோர்களான இறைநேசர்கள், ஸலபுஸ் ஸாலிஹீன் களது வாழ்வில் ரமழான் குறித்து வரும் இந்த அம்சம் நமது கவனத்தை ஈர்க்க வேண்டும். அவர்களுடைய வாழ்வில் ஒரு ரமழான் கழிந்து சென்றதும் அந்த நன்மைகளது பருவ காலத்தில் மேற்கொண்ட நல்ல செயல்கள் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்ற தவிப்பு அதிகம் காணப்படும்.

அதற்காக அதிகமதிகம் இறைவனிடத்தில் பிரார்த்தித்து மன்றாட்டம் செய்பவர்களாக அவர்கள் இருந்தனர். இதனை பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் ஊடாக நாம் இன்று தெரிந்து கொள்கிறோம். பின்னர் அடுத்த ரமழானுக்காக தங்களை தயார்படுத்திக் கொள்ள அவர்கள் சென்றுவிடுவார்கள்.

ரமழானில் நமது நல்ல செயல்கள் அங்கீகரிக்கப்பட்டதன் வெளித்தெரியும் விளைவாக "நமது நல்ல செயல்களில் தொடர்ந்தேச்சை" இருக்கும் என்பதை மார்க்க அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

உண்ணாமல் பருகாமல் நோன்பிருத்தல், உடல் அவயவங்களது விவகாரங்களில் பேணுதலுடன் நடந்துகொள்ளல், தான தருமங்களில் ஈடுபடுதல், கொடுக்கல் வாங்கல்களில் சிரத்தையெடுத்து ஹலால் ஹராம் பேணுதல், தொழுகைகளில் பர்ளு, ஸுன்னத்து அனைத்தையும் அடைந்து உச்ச நன்மைகளில் ஈடுபாடு காட்டுதல், நாவையும் இதயத்தையும் பரிசுத்தப் படுத்திக் கொள்ளுதல் என்று எமது ரமழான் கழிந்துவிட்டது.

அந்த பயிற்சிக்காலம் எமது நடத்தைகளில் கொண்டு வந்திருக்கும் மிகச் சிறிய மாற்றம் ஒன்று போதும் எமக்கும் இறைவனுக்கும் இடையிலான ரமழானிய உடன்பாட்டில் நாம் இறைநெருக்கத்தின் பால் சென்றிருக்கிறோம் என்பதில் சிறிது ஆசுவாசம் கொள்ள.

இறைநேசத்தை அடைந்துகொள்ள துடிக்கும் இறை அடியார்களுக்கு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) துஆ கேட்டு நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் 'ஆமீன்' கூறிய மூன்று பிரார்த்தனைகளில் ஓர் ஆமீன் தன் மீது பலித்துவிடக் கூடாதென்ற கரிசனையும் அச்சமும் எப்போதும் இருக்கும்.

எவர் ரமழானை அடைந்துகொண்டும் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளவில்லையோ அவர் நாசமாகட்டும் என்ற ஜிப்ரீல் (அலை)யின் பிரார்த்தனைக்கு நபி (ஸல்) அவர்கள் ஆமீன் சொன்னார்கள்.

இறுதித் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறிய ஒரு நபிமொழியும் ரமழானுக்கு பிந்தைய இறையடியானின் வாழ்வை ஒழுங்கு படுத்தி விடுவதில் அவனுக்கு அதிகம் உதவக்கூடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நற்காரியங்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்புக்குரியது எதுவெனில், குறைவாக இருந்த போதிலும் தொடர்ந்தேர்ச்சியானதாகும்." (புகாரி, முஸ்லிம்)

**ஷெய்க் ஸியாப் (நளீமி)**
**வெலிகாமம்**

# சமூக நல்லிணக்கத்தின் முக்கியத்துவம்

எந்த மனிதனும் தன்னந்தனியாக வாழ முடியாது. ஒருவரோடு ஒருவர் சேர்ந்து, இணைந்து, இசைந்து தான் வாழ வேண்டும். அப்படி வாழுகிறபோது மதம், இனம், மொழி, நிறம், கலை, கலாசாரம், சமயம், பண்பாடு போன்றவற்றை அவன் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.



இஸ்லாம் ஏனைய சமயங்களுடன் நல்லிணக்கம் பேண போதனை செய்துள்ளன. இது தொடர்பில் அல் குர்ஆன், 'மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். ஆகவே, உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்கள் தான் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், யாவற்றையும் சூழ்ந்து தெரிந்தவன். (49:13) என்று குறிப்பிட்டுள்ளது.

அல் குர்ஆனின் இந்த வசனம் மனிதன் எங்கிருந்து வந்தவன், அவன் எப்படிப்பட்டவன், அவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவனைச் சுற்றி இருப்பவர்களும் அவனைப் போன்ற மனிதர்கள் தான் என்பதை வெகுஅழகாக எடுத்துக்கூறுகிறது. இறுதியாக நீங்கள் யாராக இருந்தாலும் நீங்களும் மனிதர் தான் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள் என்பதை சற்று அழுத்தமாகவே உணர்த்திக் காட்டுகிறது.

தீய சக்திகளுக்கும், தீய சிந்தனைகளுக்கும் எப்போதுமே நாம் உடன்பட்டு விடக் கூடாது. நபி(ஸல்) அவர்களும் அவரது அருமைத் தோழர்களும் அவ்வாறு தான் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் புசிப்பவனாக இருப்பவன் உண்மையான இறைவிசுவாசியல்ல' (நபிமொழி) என்று குறிப்பிட்டார்கள்.

இந்த அறிவுரை அனைத்து வகையான அண்டை வீட்டார்களுக்கும் பொருந்தும். இறைவன் புறத்தோற்றங்களையும், புறஉருவங்களையும் பார்ப்பதில்லை. மனிதன் தான் அநேக நேரங்களில் புறத்தோற்றங்களையும் புற உருவங்களையும் பார்க்கக்கூடியனவாக இருக்கின்றான்.

'எவர் ஒரு ஆத்மாவை வாழவைக்கிறாரோ, அவர் அனைத்து ஆத்மாக்களையும் வாழ வைத்தவரைப் போன்றவர் ஆவார் (5:32) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. இந்த இறைவசனம் பொதுமைப்பட உரையாடக்கூடியதாக உள்ளது.

அதேநேரம், 'உங்களிடமிருந்து மற்றவர்கள் பெறும் நிம்மதியில் தான் உங்களது முழு நிம்மதியும் நிறைந்திருக்கிறது' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'இஸ்லாம்', 'முஸ்லிம்' என்ற அரபுச் சொல்லிற்குகூடமுறையே 'நிம்மதியைத் தருதல்' என்றும், 'நிம்மதியைத் தருபவர்' என்றும் தான் பொருள்.

எனவே இஸ்லாத்தின் நற்பெயருக்கு ஏற்ப நன்மக்களாக வாழ்வோம். சமூக நல்லிணக்கத்தை பேணுவோம்.

**பிந்த் இஸ்மாயீல்**

# சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மகத்துவம்

'படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். அவனது குடும்பத்தின் மீது அன்பு காட்டுபவனே அவனது படைப்பில் அவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவன்' என்று இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது.

இருந்தும் இன்று உலகம் முகம் கொடுத்திருக்கும் பிரச்சினைகளில் முதன்மையானது 'சுற்றுச்சூழல் சீர்கேடு' ஆகும். இதுபற்றியும், பூமி வெப்பமாவது குறித்தும்தான் அனைவரும் பெரிதும் கலந்துரையாடுகின்றனர். தொழிற்சாலை கழிவுகள், இரசாயன பசளை, பூச்சிக்கொல்லி பயன்பாடு, கதிரியக்க கசிவுகள், மலைகள் காடுகள் அழிப்பு, நீர்நிலைகளை பாழ்படுத்துதல், பிளாஸ்ரிக் பயன்பாடு, வாகனங்களின் புகை போன்ற பல்வேறு காரணங்களால் சுற்றுச்சூழல் பெரிதும் மாசடைந்துள்ளது.

அதனால் புவியை காப்பதில், சூழல் சீர்கேடுகளை தடுப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் பூமியையும், சூழலையும் பற்றி அதிகமாக பேசும் மார்க்கமாக இஸ்லாம் விளங்குகிறது.

படைப்புகள் என்றால் மனிதன் மட்டுமல்ல மரங்கள், காடுகள், மலைகள், நீர்நிலைகள், ஜீவராசிகள் என அனைத்துமே இறைவனின் படைப்புகள் தான். அவற்றின் மீது அன்பு காட்டுபவனையே இறைவன் விரும்புகிறான் என்பது இஸ்லாத்தின் வலியுறுத்தலாகும்.

மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் வாழ ஏற்ற இடம்தான் இந்த பூமியாகும். இது சீராக இயங்குவதற்கு நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவை அவசியமானது. அவற்றை மனிதன் தனது சுயநலத்திற்காக



அழிக்க முற்படும்போதுதான் சூழல் பிரச்சினைகள் மேலெழும்புகின்றன.

உலகில் மனித வாழ்வு நிலைத்திருக்க, சூழல் பாதுகாப்பு மிக அவசியமானது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதற்கு முதன்மையான காரணமாக இருப்பது அபிவிருத்தி என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்குமுறையான திட்டமிடலற்ற திட்டங்களேயாகும். அதனால் காடுகள் அழிக்கப்படுகின்றன, மரங்கள் வெட்டப்படுகின்றன, நீர்நிலைகள் தூர்ந்துப்போகச் செய்யப்படுகின்றன.

அதனால் தான் இஸ்லாம் மரம் நடுவதையும், இயற்கை வளங்களை காப்பதிலும் அதிக அக்கறையை காட்டிட சொல்கிறது. 'ஒருவர் ஒரு மரத்தினை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்கு கிடைக்கும்' என்பதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (ஆதாரம்: புஹாரி).

'அடுத்த வினாடியில் உலகம் அழியும் என்றிருந்தாலும் ஒரு ஈத்த மரக்கன்று என் கரத்தில் இருந்தால் நான் அதை நட்டு விடுவேன்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (நபிமொழி)

அதேபோல் 'வழிப்போக்கர்களுக்கும், பிராணிகளுக்கும், நிழல் தரக்கூடிய வகையில் வெட்டவெளியில் நிற்கக்கூடிய மரம் ஒன்றை யார் அநியாயமாக வெட்டுகிறாரோ அவரது தலையைப் பிடித்து இறைவன் நரகில் தள்ளுவான்' என்று இஸ்லாம் எச்சரிக்கை செய்கிறது.

மரங்கள் நடுவது மட்டுமல்ல குளங்கள், குட்டைகள், ஆறுகள், ஓடைகள், கிணறுகள் என அனைத்து இயற்கை வளங்கள் குறித்தும் இஸ்லாம் முக்கியத்துவம் அளித்துள்ளது.

'பூமியில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதில் நாசம் செய்யாதீர்கள்' என்றும், 'அவன் தான் உங்களை பூமியிலிருந்து படைத்தான். அதனை வளப்படுத்துமாறு கேட்டுக்கொண்டான்' என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.

பூமியை வளப்படுத்த வேண்டும் என்றால், பாதுகாக்க வேண்டும் என்றால் பூமியை தாங்கி நிற்கும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் விஷயங்களில் இருந்து விலகி விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். குறிப்பாக மரங்கள் நடுவதிலும், காடுகள் அழிப்பை தடுப்பதிலும், காற்று மாசு உள்ளிட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதிலும் அதிக அக்கறையை காட்டிட வேண்டும். அவை இஸ்லாம் போதித்துள்ள செயற்பாடுகளாகும்.

# நோயாளரை நலம் விசாரிக்க செல்வோம்!

ஒருவர் ஒரு நோயாளரை உடல் நலம் விசாரிக்கச் சென்றால் அவரிடம் நல்லதையே பேசவேண்டும். அவருக்கு மன தைரியத்தையும், நம்பிக்கையையும் அளிக்க வேண்டும். நோயாளரின் நலம் விசாரிப்பது குறித்து இஸ்லாம் அதிகம் ஆர்வமூட்டி, ஊக்குவித்திருக்கிறது. நோயாளர்களை கருணையுடன் அணுக வேண்டும். அவர்களை மனித நேயத்துடன் பார்க்க வேண்டும். நோயாளர்களை அணுகுவது மனம் சார்ந்து இருக்க வேண்டுமேயொழிய பணம், பதவி, இனம், மொழி, நிறம், சாதி, மதம் சார்ந்து இருந்துவிடக் கூடாது. அவர்களது நோய் நீங்கிட இறைவனிடம் இரு கரம் ஏந்தி பிரார்த்தனை செய்ய வேண்டும்.



அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் ஏழு செயல்களை செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

அவைகளாவன

1) நோயாளிகளை நலம் விசாரிக்க செல்ல வேண்டும்,

2) இறந்தவரின் இறுதி யாத்திரையில் பின் தொடர்ந்து செல்லுதல்,

3) தும்மியவருக்கு 'உமக்கு இறைவன் கருணைபுரிவானாக' என்று பிரார்த்தனை செய்தல்,

4) ஸலாம் எனும் வாழ்த்துக்கு பதில் கூறுதல்

5) அக்கிரமத்திற்கு உள்ளானவருக்கு உதவுதல்,

6) விருந்தின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுதல்,

7) சத்தியம் செய்தவரின் சத்தியத்தை நிறைவேற்ற உதவுதல்

ஆகியனவே அந்த செயல்களாகும். (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்கள் யாரேனும் ஒரு நோயாளரை உடல்நலம் விசாரிக்கச் சென்றாலோ (அல்லது) யாரேனும் ஒரு நோயாளர், நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டாலோ, நபியவர்கள் அவருக்காக பிரார்த்தனை செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். நபியின் பிரார்த்தனையின் பயனால் நோயாளரும் நோயிலிருந்து நிவாரணம் பெற்றுக்கொள்வார். நோயாளரின் விஷயத்தில் நபிகளாரின் பார்வையும், அவர்களின் நடத்தையும் இப்படித்தான் அமைந்திருந்தது.

ஒரு தடவை ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, 'நபி (ஸல்) அவர்கள் ஒரு நோயாளரை உடல்நலம் விசாரிக்கச் சென்றால், 'மனிதர்களைப் படைத்து பராமரிப்பவனே, நோயைப் போக்கி அறவே நோயில்லாதவாறு குணமளிப்பாயாக. நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணம் இல்லை என பிரார்த்தனை செய்தார்கள்' என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

மற்றொரு நபிமொழியில் உம்மு சல்மா (ரழி) அவர்கள், 'நீங்கள் நோயாளரையோ, இறந்தவரையோ சந்திக்கச் சென்றால் நல்லதையே சொல்லுங்கள். ஏனெனில், நீங்கள் சொல்வதற்கு வானவர்கள் 'ஆமீன்' (அவ்வாறு ஆகட்டும்) என கூறுகின்றனர்' எனவும் நபி (ஸல்) குறிப்பிட்டதாக அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

அதேநேரம், ஒரு முஸ்லிம் தம் முஸ்லிம் சகோதரனைக் காலையில் நலம் விசாரிக்கச் செல்லும்போது மாலை வரை எழுபதாயிரம் வானவர்கள் அவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள். அவர் மாலையில் நலம் விசாரிக்கச் சென்றால் (மறுநாள்) காலை வரை எழுபதாயிரம் வானவர்கள் அவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டு இருப்பார்கள். மேலும் அவருக்கு சொர்க்கத்தில் ஒரு தோட்டம் கிடைக்கும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

இந்த நபிமொழிகளின் படி நோயாளர்களை நலம் விசாரிக்க செல்வது மிகவும் முக்கியமான செயலும் இறைவனிடம் அதிக நன்மைகளைப் பெற்றுத்தரும் காரியமும் ஆகும். அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் நோயாளர்களை நலம் விசாரிக்கச் செல்வதை இவ்வாறு ஊக்குவித்து ஆர்வமூட்டியுள்ளார்கள்.

ஆகவே நோயாளர்களை நலம் விசாரிக்க செல்வதில் கூடுதல் அக்கறை எடுத்துக்கொள்வோம். அதன் ஊடாக இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.

**மின்ஸார் இப்றாஹிம்**

# தற்காலிக ரயில்வே பதில் பொது முகாமையாளர்



ரயில்வே பொது முகாமையாளராக பணியாற்றிய எச். எம். கே. டபிள்யூ பண்டாரவின் திடீர் மரணத்தையடுத்து வெற்றிடமான இடத்துக்கு பொருத்தமான அதிகாரி ஒருவர் அமைச்சரவையால் நியமிக்கப்படும் வரை பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) எஸ்.எஸ் முதலிகே நியமிக்கப்பட்டுள்ளார். போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனம் தொடர்பான கடிதம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் முதலிகேவிடம் அமைச்சு அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. அதன்படி அவர் தற்போது வகிக்கும் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பதவிக்கு மேலதிகமாக, ரயில்வேயின் பொது முகாமையாளர் பதவியின் கடமைகளையும் நிறைவேற்றுவார்.

## அரச வருமான இலக்குக்கு அப்பால்...

மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாட்டின் முறையான நிதி முகாமைத்துவம் மற்றும் வருமான முறைமையை பார்க்கும் போது, 2024 ஆம் ஆண்டு வருமான இலக்குகளை எட்டக்கூடிய ஆண்டாக அமையும் எனவும் இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"இந்த ஆண்டு பணப்புழக்கத்தை முகாமைத்துவம் செய்வதில் திறைசேரி கடும் சவாலை எதிர்கொள்கிறது. தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும், பணத்தை அச்சிடவும் முடியாமலிருப்பதே அதற்கு காரணமாகும். நலன்புரி மற்றும் மீள்கட்டமைப்பு செயற்பாடுகள் அதிகமாக காணப்பட்டாலும், நாட்டில் சரியான முறையில் நிதி நிர்வாகம் செய்யப்படுகிறது. மீள்கட்டமைப்புச் செலவுகள் குறித்து கவனம் செலுத்தி 2024 முதல் காலாண்டை 2020 முதல் காலாண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 2024 முதல் காலாண்டில் மீள் கட்டமைப்புச் செலவுகள் 35% அதிகரித்துள்ளன. கடன் வட்டியை திருப்பிச் செலுத்துவதிலும் 114% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளும் 60% ஆக அதிகரித்துள்ளன. பொதுக் கடனின் மூலதனத்தை திருப்பிச் செலுத்துவதிலும் 177% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 93,670 மில்லியன் ரூபா சமுர்த்தி கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ளது. ஆனால் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 117,107 மில்லியன் ரூபா நலன்புரி உதவிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. இது 2020 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் 25% வளர்ச்சியைக் காண்பிக்கிறது" என்றார்.

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி...

கோரிக்கை கடிதம் அனுப்பி வைத்துள்ளார். தனது சட்டத்தரணி மூலம் இதனை அனுப்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி இழப்பீட்டுத் தொகையை 14 நாட்களுக்குள் வழங்கா விட்டால், அந்தத் தொகையையும் அதற்கான சட்டரீதியான வட்டியையும் வசூலிக்க வழக்குத் தொடரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி நாளிதழ் ஒன்றிலும் இது தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டதன் மூலம் சுமார் 50 வருடங்களாக அரசியலில் செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் செயல்பட்ட மற்றும் இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதியாக பதவி வகித்த தமது கட்சிக்காரரின் கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் மைத்திரிபால சிறிசேன இதில் ஈடுபட வாய்ப்பில்லை. பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபால நீதிமன்றத்தை அவமதித்துள்ளார். எதிர்காலத்தில் இது தொடர்பாக நீதித்துறை நடவடிக்கையை மேற்கொள்வோம்.

அமைச்சர் அமரவீரவின் வெறுக்கத்தக்க வகையிலான அந்த அறிக்கையை ஊடகங்களில் வெளியிட்டமையினால் தனது கட்சிக்காரர் கடும் மன உளைச்சலுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைவாக 1,000 மில்லியன் ரூபா நட்டஈடு தொகை கோரப்படுவதாக சட்டத்தரணி ஜயமுதித ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

## சமாளிக்கக்கூடிய நபரை...

ராஜபக்ஷ தெரிவித்தார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தமது கட்சியில் பல வேட்பாளர்கள் இருப்பதையும் சுட்டிக்காட்டிய அவர், எந்தத் தேர்தல் வந்தாலும் அதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ எம்.பி.,

"இலங்கையில் எங்கு சென்று எமது முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் அழைக்கப்பட்டாலும், அனைத்து வேட்பாளர்களும் எமது கூட்டங்களில் இணைவதை நீங்கள் பார்க்கலாம்.

இதனூடாக எமது கட்சி, கிராமங்களிலும் தொடர்ந்து செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி, தேர்தலை வைப்பாரா? இல்லையா? என்பது எமக்கு தெரியாது. தேர்தல் வைத்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிடும். அப்போது வாக்குச்சீட்டில் மொட்டு சின்னம் இருக்கும்.

வேட்பாளர் தொடர்பாக உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம். அதனை முன்கூட்டி கூறவேண்டிய அவசியம் இல்லை. உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கேனும் விண்ணப்பிக்க வேட்பாளர்கள் யாராவது இருக்கிறார்களா என்று நீங்கள் முன்னர் என்னிடம் கேட்டீர்கள். தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்காக பொதுஜன பெரமுனவிடமிருந்து பட்டியல் வெளியாகியுள்ளது. அதன் மூலம் காலத்துக்கேற்ற சவால்களை சமாளிக்கக்கூடிய நபரை நிறுத்துவோம்" என்றார்.

## காணாமல் போன இளைஞர் ஆறு...

இரண்டு பெண்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற போது, மலை உச்சியிலிருந்து கீழே குதித்து காணாமல் போயிருந்த சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான தினேஷ் ஹேமந்த என்ற இளைஞரை பொலிஸார் தேடி வந்தனர். அவர் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிவனொளிபாதமலை வனப்பகுதிக்கு அருகில் உள்ள நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரே தோட்டத்தின் ராஜமலை பகுதியில் நேற்று முன்தினம் (24) காலை இந்த இளைஞர் கண்டுபிடிக்கப்பட்டு தோட்ட தொழிலாளர்களினால் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இளைஞரை சிகிச்சைக்காக மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் நேற்று முன்தினம் இரவு டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுத்தனர்.

இராணுவத்தினரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இளைஞரை தேடுவதற்காக 03 நாட்களாக விசேட நடவடிக்கையை மேற்கொண்டு பின்னர் அதனை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் கொழும்பு மட்ட தேசிய அபாகஸ் போட்டி

Intelligent Abacus Education (IAE) நிலையத்தின் கொழும்பு மட்ட தேசிய அபாகஸ் போட்டி நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வத்தளை OKI ஜுனியர் கனிஷ்ட பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. Intelligent Aba c u s Education (IAE) நிலையத்தின் பணிப்பாளரும், பிரதம பயிற்றுவிப்பாளருமான திருமதி V.அரசிளங்கு மாரி கிருஷ்ணதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு OKI சர்வதேச பாடசாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் கலகம கே பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். வத்தளை OKI ஜுனியர் கனிஷ்ட பாடசாலையின் அதி பர் திருமதி நிஷானி ரத்நாயக்க, வ த்தளை இலங்கை வங்கியின் முகாமையாளர் திருமதி எஸ். டி. ஷாந்திரத்ன, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் டீ. செந்துாரன், வினாத்தாள் திருத்தும் பணிக்குழாமின் தலைவி, வத்தளை, பிரதேச செயலகத்தின் ஆரம்ப நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கங்கா ஹேமந்த்த ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## இலங்கை, ஈரான் ஜனாதிபதிகளுக்கிடையே...

துறைகளிலும் நெருக்கமான ஒத்துழைப்பை பேணுவதுடன், பல தரப்பு உறவுகளில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருநாட்டு ஜனாதிபதிகளும் ஆராய்ந்தனர். அத்துடன், கடந்த காலத்தில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்கு ஈரான் இஸ்லாமியக் குடியரசு வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதிக்கு தனது நன்றியை தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சி குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரானிய ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், இலங்கையின் எதிர்கால முன்னேற்றம் மற்றும் சுபீட்சம் தொடர்பில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தனது வலுவான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துதல், அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பர ஆர்வமுள்ள முக்கிய துறைகள் குறித்தும் இருநாட்டுத் தலைவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர், இலங்கைக்கும் ஈரான் இஸ்லாமிய குடியரசுக்குமிடையிலான 05 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இரு நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் கையெழுத்திடப்பட்டன.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தேசிய நூலகம் மற்றும் ஆவணக் காப்பகத்துக்கும் இலங்கையின் தேசிய நூலகத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கையொப்பமிட்டதுடன், கலாசார அலுவல்கள் அமைச்சர் மொஹமட் மெஹ்தி இஸ்மாயில் (Mohammad Mehdi Esmaeili), ஈரான் இஸ்லாமியக் குடியரசின் சார்பில் கைச்சாத்திட்டார்.

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கலாசார மற்றும் இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சிற்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கலாசார விவகார அமைச்சர் முஹம்மது மெஹ்தி இஸ்மாயில் (Mohammad Mehdi Esmaeili) ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கைக்கும் ஈரானுக்குமிடையில் ஊடகத்துறை மற்றும் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டதோடு இலங்கையின் சார்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் சார்பில் ஈரான் எரிசக்தி அமைச்சர் அலி அக்பர் மெஹ்ரா பியான் (Ali Akbar Mehra Biyan) ஆகியோர் கையெழுத்திட்டனர். இலங்கைக்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கும் இடையிலான கலாசார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, வெகுஜன ஊடகம், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை தொடர்பான உடன்படிக்கையில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் ஈரானின் கலாசார விவகார அமைச்சர் முஹம்மது மெஹ்தி இஸ்மாயில் (Mohammad Mehdi Esmaeili) ஆகியோர் கையெழுத்திட்டனர்.

ஈரான் கூட்டுறவுச் சபைக்கும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டதுடன் இலங்கை அரசாங்கம் சார்பில் இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் தலைவர் ஜி.வி.சரத் வீரசிரி மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் சார்பாக ஈரான் கலாசார அலுவல்கள் அமைச்சர் மொஹமட் மெஹ்தி இஸ்மாயில் (Mohammad Mehdi Esmaeili) ஆகியோர் கையொப்பமிட்டனர்.

அமைச்சர்களான பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேகர, நளின் பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மரண அச்சுறுத்தல் விடுத்தமைக்கு...

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையொன்றை முன்வைத்தே வேலுகுமார் எம்.பி இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

## பேராயரின் குற்றச்சாட்டுகளை

கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தவில்லையென கர்தினால் தனது உரையின் போது குற்றம் சாட்டியுள்ளார்.

எனினும் குற்றவாளிகளை அரசியல்வாதிகளால் நீதியின் முன் நிறுத்த முடியாது. பொலிஸாரினாலேயே அதனை செய்ய முடியுமென குறிப்பிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, சட்ட மாஅதிபர் திணைக்களமும் நீதிக் கட்டமைப்பும் இணைந்து இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவரது அந்த அறிக்கையில், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் முதல் தொகுதியின் நகலை நான் கர்தினாலுக்கு வழங்குவதில் தாமதம் செய்தேன் மற்றும் மீதமுள்ள தொகுதிகளை அவருக்கு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் நிராகரித்துள்ளார்.

## கடற்றொழில்துறையை வலுப்படுத்த...

மானியத்தை இலங்கைக்கு ஜப்பான் வழங்கியுள்ளது.

03 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அநுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் சமூகத்தால் இயக்கப்படும் நான்கு சிறு குஞ்சு பொரிப்பகங்களை நிறுவி, ஐந்து NAQDA மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தி, இனவிருத்தி மற்றும் வளர்ப்புத் திறனை அதிகரிக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்புகளை அதிகரிக்கவும், நீர்த்தேக்கங்கள், இனப்பெருக்க அலகுகளுக்கு அடை காக்கும் வளர்ப்பு மற்றும் மீனவ சமூகங்களிடையே முட்டை வளர்ப்புக்கான கூண்டு வளர்ப்பு முறையை ஊக்குவித்தலாகும்.

இந்த ஓராண்டுத் திட்டத்தில் NAQDA வுக்கு மீன்குஞ்சுகளை ஏற்றிச் செல்வதற்கும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து உள்நாட்டு மீன்பிடித்தலுக்கும், அதிகாரிகள் மற்றும் மீனவர்களின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கும், உற்பத்தி, முகாமைத்துவம், பதப்படுத்துதல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தின் பெறுமதி சேர்த்தல் ஆகியவற்றிற்காக 03 நேரடி மீன் போக்குவரத்து லொறிகளை வழங்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக வகுப்புகள் 30ஆம் திகதி...

மணியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென, பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை இப்பரீட்சை நடத்தப்படவுள்ளது. இதன் காரணமாகவே இந்த அறிவித்தலை திணைக்களம் விடுத்துள்ளது. பரீட்சையை இலக்காக கொண்ட மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் யாவும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இதனை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் திணைக்களம் தெரிவித்தது.

அண்மையில் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேற்றை மே இறுதியில் வெளியிடவுள்ளதாகவும், பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டது.

# இன்றைய பலன்கள்

(26.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**

வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். பெரிய தொழிலதிபர்களின் உதவியால் வாழ்க்கை தரம் உயரும்.

**ரிஷபம் :**

தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு கடன் உதவி கிடைக்கும். பிள்ளைகளாலும் உதவி வருமானம் வரும் .வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

**மிதுனம்:**

ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது அவசியம். ஒரு சிலர் ஒவ்வாமை நோய்க்கு ஆட்பட நேரிடும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள்.

**கடகம்:**

சகோதர ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். வழக்குகள் சாதகமாக முடியும்.

**சிம்மம்:**

எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும். தேவைக்கு ஏற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் வந்து சேரலாம்.

**கன்னி:**

வெளிநாடு சென்று பணிபுரிய ஆசைப்பட்டவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். அடிக்கடி உடல் நல குறைபாடு ஏற்பட்டு உற்சாகத்தை குறைக்கும்.

**துலாம்:**

தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நினைத்த தொழிலை தொடங்க வாய்ப்பு உருவாகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**

எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிர்பார்த்ததை காட்டிலும் அதிக லாபம் பெறுவீர்கள். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும்.

**தனுசு:**

பங்குதாரர்களை ஆராய்ந்து அறிந்து சேர்த்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் இடத்தில் மிகுந்த கவனம் தேவை.

**மகரம்:**

உன்னத வாழ்வு அமைய வழி பிறக்கும். பொன் பொருள் சேர்க்கையும் பிள்ளைகளால் யோகமும் உண்டு.

**கும்பம்:**

குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயமும் கிடைக்காது.

**மீனம்:**

பொருளாதாரம் திருப்திகரமாக இருந்தாலும் குடும்ப சுமை கூடும். புனித பயணங்கள் அதிகரிக்கும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும்.

## சட்டத்தை அமுல்படுத்துமாறு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறான சம்பவங்களை யாராவது எதிர்கொள்ளும் பட்சத்தில் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன், முறைப்பாடுகளின் அடிப்படையில் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புபடும் சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பணத்தை பெற்றுக்கொள்ள உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டெனவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## இ.தொ.கா.வின் மே தின.... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதி தவிசாளர் ராஜதுரை, பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தலைவி அனுசியா சிவராஜா, தேசிய அமைப்பாளர் சக்திவேல், பிரதி பொதுச் செயலாளர் செல்லமுத்து, உப தலைவர்கள் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களின் முன்னிலையில் இத்தீர்மானம் எட்டப்பட்டது.

இம்முறை இ.தொ.கா. வின் மே தின கூட்டம் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலையில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினகரன் வாரமஞ்சரியுடன்...

வெற்றிடம் தொடர்பான விபரங்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியுடன் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளிவருகிறது.

## தங்கத்தின் விலையில்...

தங்கம் 1,73,000 ரூபாவாகும். இலங்கையில் கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன், குறிப்பாக 24 கரட் கொண்ட ஒரு பவுண் தங்கம் 02 இலட்சம் ரூபாவை தொட்டிருந்தது.

## இரா. சம்பந்தன் எம்.பி.க்கு...

03 மாதகால விடுமுறையை வழங்க பாராளுமன்றம் அனுமதியளித்துள்ளது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. முன்வைத்த முன்மொழிவுக்கமைய இந்த அனுமதியை பாராளுமன்றம் வழங்கியுள்ளது. த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தன் தற்போது சுகவீனமுற்றிருக்கும் நிலையிலேயே அவருக்கு மேலும் 03 மாதகால விடுமுறை வழங்குமாறு லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. முன்மொழிந்தார் .

இம்முன்மொழிவுக்கு ஆளும் கட்சியினரும் ஆதரவளித்த நிலையில், இரா. சமபந்தனுக்கு மேலும் 03 மாதகால விடுமுறை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 04 மாதங்களில் 1,371 முறைப்பாடுகள்;...

பணம் வசூலித்தல், சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டு வேலைகளுக்கு மக்களை வழிநடத்துதல் போன்ற பல புகார்கள் பணியகத்துக்கு கிடைத்துள்ளன.

பணியகத்துக்கு கிடைத்த இவ்வாறான முறைப்பாடுகளில் 495 முறைப்பாடுகளுக்கு இக்காலப்பகுதியில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

முறைப்பாடு செய்தவர்களுக்கு 53 கோடியே 50 இலட்சத்து 09 ஆயிரத்து 520 ரூபா பணத்தையும் விசாரணை அதிகாரிகள் மீளப்பெற்றுள்ளனர்

680 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் மோசடி செய்தவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் 28 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

பணியகத்தின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், சரியான அனுமதிப்பத்திரமின்றி இயங்கி வந்த மற்றும் சரியான பணி ஆணை பெறாமல் வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்த 08 நிறுவனங்களிலும் சோதனை நடத்தினர்.

# ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம்...




















கிளிநொச்சி மாவட்டத்தில் குருளைச் சாரணர் அணியை தன் வசம் வைத்திருந்த இரண்டாவது பாடசாலை என்ற பெருமையை கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் பெற்றுக் கொண்டுள்ளது, அந்தவகையில் சாரணர் மாணவர்களுக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களுக்கான தொடர் பயிற்சிகளை சாரண மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி பிரியதர்ஷினி அங்கசன் வழங்கி, இந்நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார். இந்நிகழ்வில் கோட்டக்கல்வி பணிப்பாளர் தர்மரத்தினம், மாவட்ட சாரண ஆணையாளர் .பிரேம்குமார் பாடசாலை நலன் விரும்பி Rtn(Phf)அமலாகுமார்,அதிபர் டேவிட கிஷ்காட், அதிபர் இரவீந்திரநாதன், ரோட்டரி கழக உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர். சாரண மாணவர்களின் உபகரணங்களுக்கான அனுசரணையை ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் வழங்கியிருந்தார், சாரணர்களுக் கான சீருடைக்கான அனுசரணையை Rtn(Phf)அமலகுமார் வழங்கியிருந்தார்.

# வடக்கின் உதயம்

## வடமாகாண சுகாதார சேவை பணிப்பாளர் – ஆளுநர் சந்திப்பு



வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வி.பி.சமன் தர்மசிறி பத்திரன, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்று சந்தித்து கலந்துரையாடினார். தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்ற புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆளுநர் செயலகத்துக்கு வருகை தந்து ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினார்.

புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரை வரவேற்ற ஆளுநர், கடமைகளை சிறப்பாக மேற்கொள்ள வாழ்த்துக்களையும் கூறினார். அத்துடன் நோயாளர்களின் உரிமைகள் தொடர்பில் அதிக அக்கறை காட்டப்பட வேண்டுமெனவும் இதன்போது தெரிவித்தார். மேலும் சுகாதாரசேவை கட்டமைப்பை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு, ஆளுநர் ஆலோசனைகளை வழங்கினார்.

## கடலுணவு பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகளில் சுகாதார பரிசோதகர்கள் திடீர் கண்காணிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் அண்மைக்காலமாக திடீர் உணவுப் பாதுகாப்புப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் பள்ளிக்குடாப் பகுதியில் இயங்கிவரும் ஆறு தொழிற்சாலைகள் உணவுப்பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் சுகாதாரக் கண்காணிப்புப் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டன.

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அதிகளவான கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் சரியான வகையில் உணவுப்பாதுகாப்பு முறைகள், தொழிலாளர் பாதுகாப்பு, சுற்றாடல் சுகாதாரம் என்பவை கடைபிடிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பயன்படுத்தப்பட்ட கழிவுநீர் உரிய வகையில் கடலுக்குள் அகற்றப்படவேண்டுமெனவும் உணவு பதனிடும்போது தொற்றுக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முறைகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்புக் குறித்தும் சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கு மூன்று மாதங்கள் நடைபெற்ற கணினி பயிற்சி வகுப்பில் சிறப்பாக செயற்பட்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் அ.பங்கையற் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி தெற்கு வலய (பதில்)கல்வி பணிப்பாளர் சிவனருள்ராஜா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களை வழங்கி சிறப்பித்தார்.

## காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில், காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மன்னார் பள்ளிமுனை பகுதியைச் சேர்ந்த ஜோன் திரவியம் குமரசேன் (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி காய்ச்சல் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மறுநாள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## இரா. உதயணன் இலக்கிய விருது 2023 வவுனியாவில் தமிழ் இலக்கிய பெருவிழா

### 28ஆம் திகதி 2.00 மணிக்கு ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில்

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும் தமிழ் இலக்கிய பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது 'இரா. உதயணன் இலக்கிய விருது 2023' வழங்கலும் 'வளர் தமிழ் கலைச்சொற்கள்' நூல் அறிமுகமும் நடைபெறவுள்ளன.

அதி உயர் இலக்கிய விருது 03, வாழ்நாள் சாதனையாளர் விருது 03, சிறந்த ஆவணக்கலை சேவை விருது 01, சிறந்த ஊடகவியலாளர் விருது 02, இளம் ஊடகவியலாளர் விருது 01, நாவல் இலக்கிய விருது 03, சிறுகதை இலக்கிய விருது 02, கவிதை இலக்கிய விருது 02, சிறுவர் இலக்கிய விருது 03, தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது 01, மொழிபெயர்ப்பு இலக்கிய விருது 01, இனநல்லிணக்க இலக்கிய விருது 01, அயலகப் படைப்பு இலக்கிய விருது 02 ஆகிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வுக்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கவுள்ளதுடன், முன்னிலை விருந்தினர்களாக புரவலர் ஹாஸிம் உமர், இலங்கைக்கான இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகங்களின் நிறுவுனரும் தலைவருமான வவுனியூர் இரா. உதயணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். முதன்மை விருந்தினர்களாக பேராசிரியர் த.மங்களேஸ்வரன், பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஆகியோரும் ஊடக விருந்தினர்களாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் இ.பாரதி, வீரகேசரி நிறுவனத்தின் செய்தி முகாமையாளர் வி.பிரபாகன், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தியத்தலாவ– ஹப்புத்தளை வீதியில் மரங்கள் முறிந்து விழும் அபாயம்

**ஊவா சுழற்சி நிருபர்**

தியத்தலாவ ஹப்புத்தளை வீதியிலுள்ள அரச வனப்பகுதியிலுள்ள மரங்கள் மண்சரிவினால் சரிந்துவிழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

பல மரங்கள் மண்சரிவினால் வேர்கள் வெளியில் தெரியும் வண்ணமிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஹப்புத்தளை தியத்தலாவ வீதியிலுள்ள சந்தி மற்றும் பொலிஸ் அதிரடி படை முகாமுக்கும் ஜனாதிபதியின் தியத்தலாவ பங்களவுக்கும் இடையிலான அரச வனப் பகுதிகளிலேயே இவ்வாறு மரங்கள் சரிந்துவிழும் அபாயம் காணப்படுகின்றது.

பைனஸ், கிராண்டிஸ் போன்ற மரங்களின் வேர்கள் கடந்த காலங்களில் பெய்த அடை மழை காரணமாக மண்சரிவுக்குள்ளான நிலையில் வெளியில் தெரிவதாக மக்கள் தெரிவிக்கின்றன.

இவை கடும் காற்றுக்கோ அல்லது மழைக்கோ விழும் அபாயத்தில் இருப்பதால்



இவற்றை உடன் வெட்டி அகற்றுமாறு வன அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நகருக்கு வந்த காட்டுயானைகள்

தம்புள்ளை நகருக்கு தற்செயலாக வந்த மூன்று காட்டு யானைகளை வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் இணைந்து விரட்டியதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 23ஆம் திகதி இரவு தம்புள்ளைக்கு வந்த மூன்று காட்டு யானைகள் நேற்றுமுன்தினம் (24) அதிகாலை வீடுகள் மற்றும் கடைகளுக்கு அருகில் சுற்றி திரிந்ததை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர்.

பின்னர், வனவிலங்கு அதிகாரிகள், தம்புள்ளை பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளின் உதவியுடன் காட்டு யானைகளை கிரலாவ, மாரகெல்ல வனப்பகுதிக்கு விரட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மலைச்சாரல்

### ஹட்டன் நகரில் 28ஆம் திகதி

## மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு நிறைவு விழா

### அமரர் சந்திரசேகரனுக்கு தபால் தலையும் வெளியீடு

மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பேராளர் மாநாடும் எதிர்வரும் 28ஆம் திகதி ஹட்டன் Dkw கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் முக்கிய நிகழ்வாக மலையக மக்கள் முன்னணிக்கு வித்திட்டு அதை விருட்சமாக வளர வழிவகுத்த மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் சந்திரசேகரனுக்கு தபால் தலை வெளியிடப்படவுள்ளதாகவும், அவர் கூறினார்.நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டை கொண்டாடும் ஒரு எழுச்சி மாநாடாக



இது அமையுமென்றும் மலையக மக்களின் வாழ்க்கை பயணத்துக்கு கட்சி என்ற அடிப்படையிலும் தொழிற்சங்கம் என்ற அடிப்படையிலும் சேவையாற்றிவரும் மலையக மக்கள் முன்னணி 35ஆவது வருடத்தில் கால் பதித்துள்ளமை வரலாற்றுமிக்க நிகழ்வாகுமென்றார்.

நிகழ்வை மிகப் பிரம்மாண்டமான முறையில் 'மாற்றத்தை நோக்கிய மலையகம்' என்ற தொனிப்பொருளில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் இம்மாநாட்டில் கடந்த காலங்களில் மலையக மக்கள் முன்னணியின் எழுச்சி, வளர்ச்சிக்காக பாடுபட்ட தொழிற்சங்க தலைவர்களை கௌரவிப்பதோடு ஊடகத்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சென்.கிளேயர் தமிழ்க் கல்லூரியின் 80 ஆண்டுகள் நிறைவு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



தலவாக்கலை சென். கிளேயர் தமிழ்க் கல்லூரி நிறுவப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார் தலைமையில் கொட்டகலையில் அண்மையில் நடைபெற்றது.

இங்கு கல்லூரியின் விளையாட்டு, இசை மற்றும் பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சென் கிளையர் வித்தியாலய அதிபர் வேலாயுதம் தினகரன் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருந்திரளான அதிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம்

**ஹற்றன் விசேட நிருபர்**

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நாளை 27 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் கொட்டகலை கொமர்சல் தலைமை பீட காரியாலயத்தில் நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக செயளாளர் சிவ ஸ்ரீ வேலு சுரேஷ் சர்மா தெரிவித்தார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.04.24
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5455 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,642,680.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 7 8 7 8 7 9

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 030 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 7 8 7 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3697 — சீட்டிழுப்பு திகதி 2024.04.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,576,850.56
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 09 11 26 51 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 43984

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1803 — 2024.04.24 — 52307 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,755,958.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 45 49 54 73
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் 0281
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 4 9 0 8 2 4 — L7 எழுத்து Z
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ 28,775,263.28

ராசி சுப பலன் — திகதி 2024.04.24 — சீட்டிழுப்பு இலக்கம் 764 — செவ்வாய் — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,185,077.72
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 02 11 23 49 — தனயோக இலக்கம் 48524 — நாளுக்கான விதி எண் 16

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1485 — 2024.04.24 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,445,418.72
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 14 18 29 36 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73335


## தேயிலைக்கான சர்வதேச தர நிர்ணய அமைப்பின் கூட்டம்

தேயிலைக்கான சர்வதேச தர நிர்ணய அமைப்பின் தொழில்நுட்பக் குழுவின் 34வது முழுமையான கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மதிப்பாய்வில் 45க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.

உலகளாவிய ரீதியில் தேயிலை உற்பத்திக்குத் தேவையான பல்வேறு சர்வதேச சந்தை அளவுருக்கள் குறித்த கலந்துரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகள் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாக கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் சஞ்சய ஹேரத் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொவிட்19 தொற்று நோய்க்குப் பின்னர் சர்வதேச தரப்படுத்தலின் (ISO) தொழில்நுட்பக் குழுவின் முதல் கூட்டம் இதுவாகும்.




பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் 1979ஆம் ஆண்டுமுதல் 1999ஆம் ஆண்டு வரையிலான பழைய மாணவிகளின் ஏற்பாட்டில் அதிபர் விமலாதேவி கணேசனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள்: பதுளை தினகரன் விசேட நிருபர்)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

அன்று பாடசாலை விடுமுறை. ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் கண்ணனுக்கு மட்டில்லாத மகிழ்ச்சி. அவன் தன் சக நண்பர்களைத் தேடிச் சென்றான். நண்பர்கள் யாவரும் மாந்தோப்பு ஒன்றில் அவன் வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மாந்தோப்பிற்குள் சென்று ஒரு கிளியைப் பிடித்தனர். அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டி கிளியைப் பறக்க விட்டு வேடிக்கை பார்த்தனர். அப்பொழுது கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிறு இறுகியது. அதனால் ஏற்பட்ட வேதனையினால் கிளி “கீக்கீ... கீக்கீ... கீக்கீ...” என அவலச் சத்தமிட்டது. அச்சத்தமானது மாணவர்களுக்கு மகிழ்ச்சியைத் தர மீண்டும் மீண்டும் கிளியை பறக்கவிட்டு இரசித்து மகிழ்ந்து சிரித்தார்கள்.

மாந்தோப்பின் சொந்தக்காரரான முதியவர் ஒருவர் அங்கு வந்தார். இவர்களின் செயலைப் பார்த்துவிட்டு “பிள்ளைகளே முதலில் நீங்கள் கிளியைப் பறக்க விடுங்கள். அது வேதனையால் சத்தமிடுவது உங்களுக்கு கேட்கவில்லையா? பறவைகள் மிருகங்களிடத்தே நாம் அன்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அவற்றை சித்திரவதை செய்யக்கூடாது” எனக் கூறினார்.

01. மேலுள்ள பகுதியிலிருந்து நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்பு யாது?

..................................................................................................

02. “விநோதம்” என்பதன் ஒத்தகருத்து எழுதுக. ..........................................

03. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ..........................................

04. கிளி எதற்காக அவலச் சத்தமிட்டது? ..................................................

05. சினைப் பெயர் ஒன்று எழுதுக. ..........................................................

06. இறுதியிலே என்பதன் எதிர்கருத்தை எழுதுக. ..........................................

07. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

i. ஒவ்வொரு மாணவனும் .................................. (நல்லவர்கள் / நல்லவனே)

ii. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட மான்கள் காட்டுக்குள் சிதறி ஓடிச் .................................. (சென்றன / சென்றது)

08. பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.
i. சுதந்திரமற்று வாழ்பவன் .................................. (அடிமை / கைதி)

ii. கடற்கரையில் மீன்பிடித் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் இடம் ................ (வாடி / மடி)

09. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
i. வழக்கை தாக்கல் செய்பவன் ..................................................

ii. தன்னுடைய நன்மைகளை மட்டும் கருத்தில் கொள்பவன் ........................

**II.**

10. கிளி பேசும் என்பது போல பல்லி - ..................................................

11. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியின் கருத்து யாது?

..................................................................................................

12. புதிர்களுக்கு பொருத்தமான விடையை எழுதுங்கள்.
i. கடித்தால் கடிபட மாட்டான், பிடித்தால் பிடிபட மாட்டான். அவன் யார்? ..........

ii. வாலுள்ளவன் வானத்தில் பறக்கிறான். அவன் யார்? ..............................

13. சொற்களை ஒழுங்கமைத்து சரியான வாக்கியமொன்றை எழுதுக.
i. வானொலி / எளிதில் / பாமர / கூட / படிக்காத / சென்று விடுகிறது / மக்களிடையே / நிகழ்ச்சிகள்

..................................................................................................

ii. அன்பு / நாம் / செலுத்த / உயிர்களிடத்தில் / வேண்டும் / எப்போதும்

..................................................................................................

14. மரபுத் தொடருக்குரிய கருத்தை எழுதுக.

i. வாட்ட சாட்டம் - ..................................................................

ii. நாக்குப் புரளுதல் - ..............................................................

15. மிகப்பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.
i. பனை வடலி போல வேம்பு .................................. (குட்டி / கன்று)

ii. ஆடு மந்தை போல மான் .................................. (கூட்டம் / கும்பல்)

**III.**

16. பின்வரும் பழமொழியைப் பூரணப்படுத்துக.

ஊருடன் பகைக்கின் ..................................................................

17. பின்வரும் சொற்களின் கருத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. விகட கவி - ..................................................................

ii. வைர விழா - ..................................................................

iii. தசாப்தம் - ..................................................................

18. வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக.
i. நெருப்பு, அக்கினி, தண்மை ii. கேடு, ஆக்கம், அழிவு

19. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கமைத்து கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
i. has / cat / My / legs / four - ..................................................

ii. reading / I / book / am / a - ..................................................

20. i. “மித்துரா” என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ் சொல்லை எழுதுக.

..................................................................................................

ii. கீழேயுள்ள வாக்கியத்தை சிங்களத்தில் சொல்லும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுங்கள்

கை கழுவுங்கள் - ..................................................................

21. A பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு B பாத்திரத்தினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்? ..............................




22. 1 kg வாழைப்பழத்தின் விலை ரூபாய் 70.00 ஆகும். 1kg 250g வாழைப்பழம் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?

23. புகைவண்டி மு.ப. 11.45ற்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு மறுநாள் மு.ப. 2.15ற்கு திருகோணமலையை சென்றடைந்தது. பயணத்திற்காக செலவழித்த மொத்த நேரம் எவ்வளவு?

..................................................................................................

24. இவ்வுருவிலுள்ள சதுரங்கள் எத்தனை? ....................



25.




B யிலிருந்து C வரைக்குமான தூரம் எவ்வளவு? ....................................

- **வகுப்பிலுள்ள மாணவர்கள் விரும்பும் பிராணிகள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது.**




26. பூனையை விரும்புபவர்கள் எத்தனை பேர்?

..................................................

27. பூனையை விரும்புபவர்களை விட 8 பேர் குறைவாக அணிலை விரும்புகிறார்கள். அதனை வரைபில் குறித்துக் காட்டுங்கள்.

28.



தரப்பட்ட உருவை அவதானித்து விடை எழுதுங்கள்.

i. நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் எழுதுக. ..................................

ii. நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணில் எழுதுக. ..................................

29. விலைப்பட்டியலை அவதானித்து வெற்றிடங்களில் வரவேண்டிய பணத்தொகையை எழுதுக.

| பொருள் | வாங்கிய அளவு | ஒன்றின் விலை | செலுத்த வேண்டிய பணம் |
|---|---|---|---|
| மாம்பழம் | 3 | 45.00 | .................. |
| அப்பிள் | 5 | 30.00 | 150.00 |
| அன்னாசி | 2 | 75.00 | .................. |
| தோடம்பழம் | 6 | 35.00 | .................. |
| மொத்தம் | | | .................. |

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. பூக்களை நீண்ட நாட்கள் வாடாமல் வைத்திருப்பதற்கு சாடியினுள் நீருடன் சேர்க்கும் பொருள் எது?
i. உப்பு ii. அஸ்பிரின் iii. ஒடிக்லோன்

31. வீதியில் பயணிக்கும் போது பேணப்பட வேண்டிய நற்பழக்கம் ஒன்று அல்லாதது
i. வீதியின் வலது பக்கமாகச் செல்லுதல்
ii. குழுவாகச் செல்லுதல்
iii. வேறு செயல்களில் ஈடுபடாது செல்லுதல்

32. இலங்கையின் கிராமிய விளையாட்டுகளில் ஒன்று
i. வலைப்பந்தாட்டம் ii. சடுகுடு iii. கரப்பந்தாட்டம்

33. பனிக்கட்டிகளை கரையாமல் தூர இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு பயன்படக்கூடிய பொருள்
i. பொலித்தீன் பை ii. பிளாஸ்டிக் பெட்டி iii. ரெஜிபோம் பெட்டி

34. நீரில் இடப்பட்ட பனிக்கட்டிக்கு யாது நிகழும்?
i. அமிழும் ii. மிதக்கும் iii. உடையும்

35. விவசாயச் செய்கையில் பயிர்களை விலங்குகளிடம் இருந்து பாதுகாக்க பயன்படும் உபகரணம்
i. நீர்ச்சுழலி ii. நீர் பிசாசு iii. நீர்க்கம்பி

36. தாவரங்களால் பிராணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள்
i. சூரிய ஒளியும், வளியும் கிடைத்தல்
ii. நிழல் குறைவடைதல், ஏறி விளையாடுதல்
iii. வாழிடம், உணவு, பாதுகாப்பு

37. சூரிய நமஸ்கார செயற்பாட்டின் படிமுறைகள் எத்தனை உண்டு?
i. 10 ii. 12 iii. 13

38. தற்காலத்தில் வலுச்சக்தியாக பயன்படாதது?
i. எரிபொருள் ii. மின்சாரம் iii. பிராணிகள்

39. நீரை சுத்திகரிக்கும் முறையாக அமையாதது?
i. நன்றாக கொதிக்க வைத்தல்
ii. வடிகட்டிகளில் வடித்தல்
iii. குளிரூட்டியில் வைத்தல்

40. “பயணிக்குக” என்பதற்கு ஒளிரும் வீதிச் சமிக்ஞை விளக்கின் நிறம்?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

41. பேருந்தில் விசேட ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இரு பிரிவினர்
i. மதகுருமார், வைத்தியர்
ii. விசேட தேவையுடையோர், கர்ப்பிணித் தாய்மார்
iii. விசேட தேவையுடையோர், இராணுவ அதிகாரி

42. ஆபத்து ஏற்பட்டவுடன் உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்ளும் பிராணி
i. நத்தை ii. மரவட்டை iii. ஆமை

43. இந்த அடையாளத்தை சமய குறியீடாக பயன்படுத்துபவர்கள்

i. இஸ்லாம் சமயத்தவர் ii. இந்து சமயத்தவர்
iii. கத்தோலிக்க சமயத்தவர்

44. சுத்தமான நீரில் காணப்படாத இலட்சணம்
i. நிறமில்லை ii. சுவையுண்டு iii. மணமில்லை

45. இலங்கையின் தேசிய மலர்
i. நீல அல்லி ii. தாமரை iii. அல்லி

46. கற்புல சாதனம்
i. வானொலி ii. சுவரொட்டி iii. ஒலிபெருக்கி

47. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அமையாதது
i. தாமரை தடாகம் ii. சீகிரிய iii. யாழ்ப்பாணக் கோட்டை

48. வன்மையான தண்டினைக் கொண்ட மரம்
i. பலா ii. பப்பாசி iii. முருங்கை

49. உடலில் நோய்கள் ஏற்படக் காரணமாக அமைவது
i. பழங்களை உண்ணுதல் ii. செயற்கை பானங்களை அருந்துதல்
iii. தினந்தோறும் உடற்பயிற்சி செய்தல்

50. எல்லா காலத்திலும் பூக்கும் பூ
i. வாழை ii. மா iii. தூரியன்

51. உணவு சமைக்கும் போது தொற்று நீக்கியாக பயன்படுத்தப்படும் பொருள்
i. மஞ்சள் ii. வெள்ளைப்பூடு iii. மிளகாய்

52. முட்டை அவிக்கும் போது நீருடன் சேர்க்கப்படும் பொருள் ஒன்று
i. உப்பு ii. கொரக்காபுளி iii. தேசிக்காய்

53. இரவு வேளையில் நடமாடும் பறவை ஒன்று
i. மரநாய் ii. ஆந்தை iii. மின்மினிப் பூச்சி

54. மரமொன்றின் சகல பகுதிகளும் மனிதனுக்கு பயன்தரக்கூடிய தாவரம் ஒன்று
i. மாங்காய் ii. தென்னை iii. ஈரப்பலா

55. மஸ்ஜித் எனும் சமய வழிபாட்டு இடத்துக்குரிய மதத்தினர்
i. இஸ்லாமியர் ii. இந்துக்கள் iii. கிறிஸ்தவர்கள்

56. இலங்கையின் பிரதான நீர்வீழ்ச்சி
i. நில்வளா ii. பம்பரகந்தை iii. மின்னேரியா

57. உழவன் பயன்படுத்தும் உபகரணம் அல்லாதது
i. கலப்பை ii. முள்ளு iii. மட்டப்பலகை

58. தண்டுப் பகுதியைப் பயன்படுத்தி பயிரிடப்படும் தாவரம் ஒன்று
i. கத்தரி ii. மரவள்ளி iii. முள்ளங்கி

59. மஞ்சள் நிறத்தில் பூக்கும் தாவரம் அல்லாதது
i. பாகற்காய் ii. கத்தரிக்காய் iii. பூசணிக்காய்

60. மனித வாழ்வுக்கு உணவு இன்றியமையாதது. உரிய நேரத்தில் உணவருந்தலும், ஆரோக்கிய வாழ்வுக்குக் காரணமாகும். உணவின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

## கடந்த வார (19.04.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 3 | 21. 2 | 31. 2 |
| 02. 1 | 12. 2 | 22. 2 | 32. 3 |
| 03. 3 | 13. 3 | 23. 3 | 33. 2 |
| 04. 3 | 14. 3 | 24. 2 | 34. 3 |
| 05. 3 | 15. 2 | 25. 2 | 35. 3 |
| 06. 2 | 16. 3 | 26. 1 | 36. 2 |
| 07. 1 | 17. 1 | 27. 2 | 37. 3 |
| 08. 1 | 18. 3 | 28. 1 | 38. 3 |
| 09. 3 | 19. 3 | 29. 3 | 39. 1 |
| 10. 1 | 20. 2 | 30. 1 | 40. 2 |

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் நிலவும் காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



நுரைச்சோலை வீட்டுத்திட்டம் உட்பட அம்பாறை மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்.

காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் அமர்வு அதன் இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தலைமையில் ஒலுவில் தனியார் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்தில் பல தசாப்தங்களாகத் தீர்வின்றித் தொடரும் காணி அபகரிப்பு மற்றும் நுரைச்சோலை வீட்டுத் திட்டம் உட்பட அம்பாறை மாவட்டத்தில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு கிட்டும் என தான் உறுதியாக நம்புவதாக தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்டும் காலம் வந்துள்ளது. ஒவ்வொரு பகுதியிலுள்ள காணிப் பிரச்சினைகளுக்கும் சாதகமான தீர்வுகள் கிடைத்துவிடும். காணிப் பிரச்சினைகள் சம்பந்தமான தரவுகளை அக்குவேர் ஆணிவேராக கிடைக்கச் செய்த பெருமை அம்பாறை மாவட்ட காணி உரிமைகளுக்கான அமைப்பை சாரும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சுமார் 5000 குடும்பங்களின் 16000 ஏக்கர் பரப்பளவான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நாடு உணவுப் பஞ்சத்திலும் பொருளாதார நெருக்கடியிலும் சிக்கித் தவிக்கும்போது மக்கள் பயிர் செய்த விவசாயக் காணிகளை வனவிலங்குகளுக்காகவும் வனத்திணைக்களத்துக்காகவும் தொல்பொருளுக்காகவும் புனித பூமிகளாகவும் மாற்ற சட்டம் பயன்படுத்தப்படுகின்றது என்றால் இதைவிட அநியாயம் இருக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

## 'விபுல விருட்சம்' நூல் வெளியீட்டு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)



காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட "விபுலவிருட்சம்" KSC@40 என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு விளையாட்டுக் கழகத் தலைவர் ரொட்டரியன் விஜய ரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பித்தார்.

முதற் பிரதியை தலைவர் சாந்தன் பிரதம அதிதி மகேசனிடம் வழங்கிவைத்தார். ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் உள்ளிட்ட அதிதிகளுக்கும் அவர் வழங்கி வைத்தார்.

மலர் ஆசிரியர் முன்னாள் தலைவர் த. தவக்குமார், நூலாக்க குழு ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, செயலாளர் எஸ். கிருசாந் முன்னிலையில் நிகழ்வு நடைபெற்றது.

## திருமலையில் வேன் மோதி மாணவி காயம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராஜவரோதயம் வீதியில் இடம் பெற்ற விபத்தில் 15 வயது பாடசாலை மாணவி படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் புதன் கிழமை (23) இடம்பெற்றுள்ளது. குறித்த மாணவி வீதியை கடக்க முற்பட்ட போது வான் ஒன்று மோதியதால் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து, சம்பவம் தொடர்பாக கண்டியை சேர்ந்த 32 வயதுடைய வேன் சாரதி திருகோணமலை தலைமையகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், விபத்தில் காயமடைந்த மாணவி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தினால் விசாரணைகள் முன்னெடுப்பு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் நேற்று மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் இதுதொடர்பில் தகவல்களை பெற்றுக் கொண்டனர்.

ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்ட களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி, வெல்லாவெளி பட்டிப்பளை, ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடத்தில் இதன்போது கொழும்பிலிருந்து வருகைதந்த காணாமலாக்கப்பட்டோர் ஆட்கள் பற்றிய அலுவலக அதிகாரிகள் நேரில் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

61 பேருக்கு இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பிலும், அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்குவது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

## இந்திய சிரேஷ்ட ஊடகவியலாளர் - முஷாரப் எம்.பி சந்திப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் முதுவை ஹிதாயத்துல்லா, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோருக்கிடையிலான சினேகபூர்வமாக சந்திப்பு நேற்று முன்தினம் பொத்துவில் பிரதான காரியாலயத்தில் நடைபெற்றது.

| தொடர் இல. | பிரதேசம் | அளவு |
|---|---|---|
| 01 | கண்டி மாவட்டம் | 10 |
| 02 | மாத்தளை மாவட்டம் | 10 |
| 03 | நுவரெலியா மாவட்டம் | 10 |

2. கேள்வியுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை கண்டி, யட்டிநுவர வீதி, இல.109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இடம் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. இலக்கம் : 081 - 2234769 மற்றும் Email : ministryofroadscp@gmail.com
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமான ரூ.1500.00 ஐ கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109 இல் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை வியாபார கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட வேண்டுதல் கடிதத்துடன் அமைச்சின் கணக்கு இலக்கத்திற்கு சமர்ப்பித்து 2024.04.29 முதல் 2024.05.17 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு குறிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் சாதாரணமாக அன்றாட விடயங்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் மாகாணத்திற்குள் நடமாடுவதை கட்டுப்படுத்தல் எல்லை, தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படல் காரணமாக ஏதேனும் திருத்தமொன்று மேற்கொள்ளப்படின் அது பற்றி அமைச்சு இணையதளத்தில் (roadmin.cpgov.lk) பிரசுரிக்கப்படும்.
5. முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.05.20 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கண்டி, யட்டிநுவர வீதி, இல.109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு, பெயர் குறிப்பிட்டு பொறியிட்டு ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் வழங்கல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
8. சமர்ப்பிக்கப்படும் கேள்வி 2024.08.17 வரை செல்லுபடியாவதுடன், இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்ட ரூ.361,400.00 பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்விப் பிணையானது 2024.09.15 வரை செல்லுபடியாதல் வேண்டும். இல்லையெனில், மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளரிடம் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் ரூபா. 180,700.00 ஐச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்விப் பிணையாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. இக் கேள்வி பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.05.13 மு.ப. 11.30 இற்கு மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் நடைபெறும்.
10. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டியின் மதிப்பீட்டிற்கு உட்படுவதுடன் பெறுகைக் குழுவின், தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**மத்திய மாகாணம்,**
**இல.109, யட்டிநுவர வீதி,**
**கண்டி**

# தேருநர் இடாப்பு மீளாய்வு

**இந்த QR குறியீட்டை Scan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும். அல்லது ec.lk/vrd எமது இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.**

## தேருநர்களை பதிவு செய்தல் சட்டத்தின் பிரகாரம் 2024(I), 2024(2) மற்றும் 2024(3) குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

**வரைவிலக்கணம்**

01. சட்டம் - 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம்.

02. குறைநிரப்புப் பட்டியல் - 2024 பெபரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் (அதாவது 2006.02.01 ஆம் திகதி முதல் 2006.05.31 வரை பிறந்துள்ள) மற்றும் 2024(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பட்டியல். 2024 யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் (அதாவது 2006.06.01 ஆம் திகதி முதல் 2006.09.30 வரை பிறந்துள்ள) மற்றும் 2024(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பட்டியல். 2024 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2025 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதைப் பூர்த்தி செய்யும் (அதாவது 2006.10.01 ஆம் திகதி முதல் 2007.01.31 வரை பிறந்துள்ள) மற்றும் 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்படும் பட்டியல்.

**குறைநிரப்புப் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்.**

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| 01. ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் மொத்த குறைநிரப்புப் பட்டியல்களின் பிரதி |
| 02. ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |
| 03. ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம் | குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்புப் பட்டியல் |

**அறிவுறுத்தல்கள்**

01. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20 அ (5) உப பிரிவிற்கமைய 2024(1), 2024(2) மற்றும் 2024(3) குறைநிரப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியல்கள் அல்லது அதன் பிரிவுகள் அலுவலக நேரத்தினுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பொதுமக்கள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அங்கு II ஆம் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் 2024.04.26 ஆம் திகதி குறைநிரப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 20 அ (5) உப பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யும் அலுவலருக்காக அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.
02. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2024.05.31 ஆம் திகதியன்று, 2024.09.30 ஆம் திகதியன்று மற்றும் 2025.01.31 ஆம் திகதியன்று பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்யும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பான குறைநிரப்பு தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு தகைமையைப் பெற்றுள்ள ஆனாலும் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது வேறு நபரொருவரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தனக்கு பதிலாக வேறொருவரால் உரிமை கோரப்படுமாயின், அவ்வாறு உரிமை கோருபவர்களால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள 'அ' மற்றும் 'ஆ' படிவத்திற்கமைய அல்லது வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள YC படிவத்தினூடாக அல்லது பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் 2024 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதல் 10 நாட்களுக்குள் அதாவது 2024 மே மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலருக்கு (மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்) கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.
03. தேர்தல் மாவட்டத்துடன் தொடர்பான குறைநிரப்புப் பட்டியலில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவருக்கு, தனது பெயர் அல்லது அந்தப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் தொடர்பாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இ படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். குறைநிரப்பு வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படுதல் தொடர்பாக குறிப்பிடப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் இந்த அறிவித்தல் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் அதாவது 2024 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதல் பத்து (10) நாட்களுக்குள் அதாவது 2024 மே மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.
04. உரிமைக் கோரிக்கையைக் கோரும் நபரின் பெயரை குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் தொடர்பாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உள்ளடங்கிய பட்டியல் மற்றும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப்பட்டியலொன்று அடங்கிய அறிவித்தலொன்று மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 07 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், 'ஈ' படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2024 மே மாதம் 12 ஆம் திகதி முதல் பிரசித்தப்படுத்தப்படும்.
05. உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவையான 'அ' , 'ஆ' YC படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான 'இ' , 'ஈ' படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்கள் அல்லது கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க**
**தவிசாளர்**
**தேர்தல் ஆணைக்குழு.**

**2024 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி.**
**தேர்தல்கள் செயலகத்தில்.**

**அட்டவணை**

| I ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல் 2024(1), 2024(2), 2024(3) குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரித்த உதவிப் பதிவு அலுவலர் | ஐ ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல் 2024(1), 2024(2), 2024(3) குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரித்த உதவிப் பதிவு அலுவலர் |
|---|---|---|---|
| 01. கொழும்பு | எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா | 12. மட்டக்களப்பு | எம்.பி.எம். சுபியான் |
| 02. கம்பஹா | டப்ளியூ.ஏ. ரவீந்திர விக்கிரமசிங்ஹ | 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | 14. திருகோணமலை | ஆர். சசீலன் |
| 04. கண்டி | எச்.டீ.என். சம்பத் பெர்னாந்து | 15. குருநாகல் | ஆர்.எம்.எச்.பி. ரத்னாயக்க |
| 05. மாத்தளை | எச்.ஏ.ஈ.புஷ்பகுமார | 16. புத்தளம் | எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க |
| 06. நுவரெலியா | கே.ஏ.எல்.எஸ்.கலுகம்பிட்டிய | 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் |
| 07. காலி | டப்ளிவ்.எச்.ஆர். விஜய குமார | 18. பொலன்னறுவை | பியுமி ஆட்டிகல |
| 08. மாத்தறை | ரீ.டப்ளியூ.போஷிதா கௌமதி | 19. பதுளை | கே. காந்தீபன் |
| 09. அம்பாந்தோட்டை | என். ரேகன் | 20. மொனராகலை | என். ரேகன் |
| 10. யாழ்ப்பாணம் | ஆர்.சீ. அமல்ராஜ் | 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ |
| 11. வன்னி | ஜே.ஜெனிட்டன் | 22. கேகாலை | சஜித் பீ. கஸ்துரிசிங்க |

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச பெருந்தோட்ட
தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### உடைந்த பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள கெலேபொக்க, கோமர, கல்பிஹில்ல, ஹுன்னஸ்கிரிய, ரங்கல, ஹெயார்பார்க் மற்றும் வைத்தலாவ போன்ற 07 தோட்டங்களில் உள்ள இனங்காணப்பட்ட உடைந்த பொருட்களை தற்போதைய சந்தை பெறுமதியின் பிரகாரம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை கொழும்பு-10, ஸ்ரீ தம்ம மாவத்தை, 257ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2024-04-26ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-05-10ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையிலும் மற்றும் பன்விலயில் (கல்பிஹில்ல) அமைந்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்தில் 2024-04-26ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-05-09ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரையிலும் 5000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு கேள்விக்காகவும் வைப்புத் தொகையை வெவ்வேறாக வைப்புச் செய்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புத் தொகை செலுத்திய பற்றுச்சீட்டுடன் 257ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-05-10ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும்.

2024-05-10ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து அந்த கேள்விப் படிவங்கள் கேள்விக் குழுவின் முன்னிலையில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கொள்வனவாளர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத கேள்விப் படிவங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பு கூறாது என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10.**
**0114-194879** **2024-04-24**

## சுகாதார சேவை திணைக்களம்

## கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, காலி

# ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளை வழங்குவதற்கு முன்வைக்கப்படும் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு படிவம் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவரினால் ஏற்கப்படும்.

| உருப்படி பெயர் | Qtu | விலைமனு படிவம் வழங்கப்படும் திகதி மற்றும் நேரம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 1. Autoclave Machine 60L | 01 | 2024.04.26 ஆம் திகதி தொடக்கம் 2024.05.16 ஆம் திகதி வரை மு.ப. 9.00 - பி.ப. 03.00 | 2024.05.17 மு.ப. 10.00 |
| 2. Dental X-Ray CR System – | 01 | | |
| 3. Defibrillator | 02 | | |
| 4. Phaco Machine | 01 | | |
| 5. Pulse Oximeter | 03 | | |
| 6. Low Suction | 01 | | |
| 7. Syring Pumps | 10 | | |
| 8. Ward Monitor | 05 | | |
| 9. Infusion Pumps | 01 | | |
| 10. Yag Machine | 01 | | |
| 11. Vidio Laryngoscope | | | |

இலங்கை சந்தைக்காக மேலுள்ள உபகரணங்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பெயரிடப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரம் மேலுள்ள கேள்விமனுவில் பங்கேற்பதற்கு தகுதி பெறுவர்.

2024.04.26 ஆம் திகதி தொடக்கம் 2024.05.16 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் இருந்து விலைமனு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

தகுதி பெற்ற விலைமனுதாரர், பிரதிநிதி ஒருவர் அல்லது விலைமனுதாரருக்காக நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் பெற்றுக்கொண்ட விலைமனு படிவத்தை முறையாக பூர்த்தி செய்து, முத்திரை பொறித்து இரு பிரதிகளுடன் ஒப்படைத்தல் வேண்டும் என்பதோடு, கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அடிப்படையில் அதனை மேற்கொள்ளல் வேண்டும்.

**விலைமனு படிவத்தை பெறும் சந்தர்ப்பத்தில்**

a. காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு முன்வைக்கும் கோரிக்கை கடிதம்.

b. ஒவ்வொரு விலைமனுவுக்காகவும் பணமாக 5000.00 ரூபாவை, காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை கணக்காளருக்கு செலுத்த வேண்டும் என்பதோடு, அது மீளளிக்கப்பட மாட்டாது.

c. உறுதி செய்யப்பட்ட நிழல் பிரதியுடன் வர்த்தகப் பதிவு சான்றிதழ்.

d. வெளிநாட்டு வர்த்தக நிர்வாகத்தினால் உள்நாட்டு பிரதிநிதி ஒருவராக விண்ணப்பதாரர் நியமிக்கப்பட்டதற்கான சான்றிதழ்/ கடிதம் அல்லது அதிகாரம் அளிக்கப்படும் ஆவணம்.

**விலைமனு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில்**

a. 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பிரிவின் கீழ் கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள “சமாகம் மெதுரவில்” அரச ஒப்பந்தம் தொடர்பில் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

b. விலைமனு பெறுமதி 2% கொண்ட இலங்கையில் உரிமம் பெற்ற மற்றும் பதிவு செய்யப்பட்ட (CBSL இனால்) வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து அனைத்து விலைமனுக்களுக்கும் விலைமனு பிணை ஒன்று இருத்தல் வேண்டும் என்பதோடு அது விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 150 நாட்களுக்கு (2024.10.13) செல்லுபடியாக இருத்தல் வேண்டும். அது விலைமனு ஆவணத்துடன் வழங்கப்பட்ட விலைமனு பிணை வடிவத்திற்கு ஒத்திருத்தல் வேண்டும்.

c. CDDA பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

2024 மே மாதம் 17 ஆம் திகதி மு.ப. 10.00க்கு கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் விலைக்கேட்பு நிறைவடைந்த பின் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரினால் எழுத்துமூலம் நியமிக்கப்பட்டு அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. மேலதிக விபரங்கள் பணிப்பாளர் அல்லது தலைமை கணக்காளர், போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் - 0912232159**

**தொலைநகல் - 0912227638**

விலைமனு ஆவணங்கள் 2024.09.12 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். (விலைமனுக்களை திறக்கும் திகதியில் இருந்து 119 நாட்கள் வரை)

மேலுள்ள உருப்படிகளுக்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் 2024 மே மாதம் 13 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.

பெறுகைக் குழுவின் முடிவு ஒப்பந்தம் வழங்குவதில் இறுதி முடிவாகும்.

ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்த பெறுகைகளை இரத்துச் செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

**தலைவர்/ பணிப்பாளர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, காலி.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்

### காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை

செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960

### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: CResMPA-1/RP/WORKS/ID-TRI/NCB/054, NCB/055, & NCB/060**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலை ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திருகோணமலை - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (மாதங்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறி | | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | |
| CResMPA-I/ RP/ WORKS/ID-TRI/ NCB/054 | தம்பலகாமம் பிரதேச பிரிவில் உள்ள கல்மெட்டியாவ நீர்ப்பாசனத்தில் பிரதான கால்வாய் மற்றும் DI கால்வாயின் 0+000 முதல் 0+375 வரை மேம்படுத்துதல் | 6 | C6 | 5,500.00 | 195,000.00 | 105 (2024-09-02ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-I/ RP/ WORKS/ID-TRI/ NCB/055 | கோமரங்கடவல பிரதேச பிரிவில் உள்ள மஹகல்லம்பற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் வலதுகரைக்கு அப்பாலுள்ள D2 பிரதான கால்வாயை (chainage 0+175 முதல் 0+500) மேம்படுத்துதல் | 6 | C7 | 4,500.00 | 131,000.00 | 105 (2024-09-02ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |
| CResMPA-I/ RP/ WORKS/ID-TRI/ NCB/060 | பெராமடுவ திட்டத்திலுள்ள D4 கால்வாயில் Stn 0+000 முதல் 1+400 வரை மேம்படுத்துதல் | 6 | C6 | 5,000.00 | 162,000.00 | 105 (2024-09-02ஆம் திகதி வரை) | 77 நாட்கள் |

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகங்களில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். விரும்பினால் தொடர்பு விபரங்களுடன் பின்வரும் இயைபுடைய அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | அதிகாரிகள் | முகவரி | தொலைபேசி இலக்கம் | விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| தம்பலகாமம் பிரதேச பிரிவில் உள்ள கல்மெட்டியாவ நீர்ப்பாசனத்தில் பிரதான கால்வாய் மற்றும் DI கால்வாயின் 0+000 முதல் 0+375 வரை மேம்படுத்துதல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை | உள்துறைமுக வீதி, திருகோணமலை | 026-2222524 | • நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை தொ.பே. 026-2222524 |
| கோமரங்கடவல பிரதேச பிரிவில் உள்ள மஹகல்லம்பற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் வலதுகரைக்கு அப்பாலுள்ள D2 பிரதான கால்வாயை (உாயயெபந 0+175 முதல் 0+500) மேம்படுத்துதல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை | உள்துறைமுக வீதி, திருகோணமலை | 026-2222524 | • நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை தொ.பே. 026-2222524 |
| பெராமடுவ திட்டத்திலுள்ள D4 கால்வாயில் Stn 0+000 முதல் 1+400 வரை மேம்படுத்துதல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை | உள்துறைமுக வீதி, திருகோணமலை | 026-2222524 | • நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை தொ.பே. 026-2222524 |

5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதிக்கு மேலதிகமாக சித்திகரமான விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி, சட்டபூர்வம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-29ஆம் திகதி முதல் 2024-05-20ஆம் திகதி வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் திருகோணமலை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையிலிடப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகளுடன் 2024-05-20ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் ‘‘நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது திருகோணமலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் திருகோணமலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
8. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் (விலைமனுக்கள் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெறப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று (விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளது) மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு திருகோணமலை - நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பெயரில் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுடனான விலைக்கோரல் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| மாவட்டம் | வேலையின் பெயர் | வேலைத் தள விஜயத்திற்கு உதவும் பிரதேச பொறியியலாளர் | வேலைத் தள விஜயம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (திகதி மற்றும் நேரம்) | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை | தம்பலகாமம் பிரதேச பிரிவில் உள்ள கல்மெட்டியாவ நீர்ப்பாசனத்தில் பிரதான கால்வாய் மற்றும் DI கால்வாயின் 0+000 முதல் 0+375 வரை மேம்படுத்துதல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை | 2024-05-14ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2024-05-13ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை |
| திருகோணமலை | கோமரங்கடவல பிரதேச பிரிவில் உள்ள மஹகல்லம்பற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் வலதுகரைக்கு அப்பாலுள்ள D2 பிரதான கால்வாயை (chainage 0+175 முதல் 0+500) மேம்படுத்துதல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை | 2024-05-14ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2024-05-13ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை |
| திருகோணமலை | பெராமடுவ திட்டத்திலுள்ள D4 கால்வாயில் Stn 0+000 முதல் 1+400 வரை மேம்படுத்துதல் | பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை | 2024-05-14ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | 2024-05-13ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை |

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் திருகோணமலை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும். (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) வளமுள்ள விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரதேச பொறியியலாளரின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் (திகதி மற்றும் நேரம் என்பன மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளன.) மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
10. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.
11. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். பிராந்திய பெறுகைக் குழு தனது சொந்த விருப்பத்தில் ஒன்றை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**

திகதி: 2024-04-26.

# ஆப்கான் ஏ அணிக்கு எதிரான ஒருநாள் தொடர்: இலங்கை ஏ குழாம் அறிவிப்பு



## ஆரச்சிகே தலைமையிலான அணியில் சிராஸுக்கு இடம்

ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான முதல் இரு உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான 13 பேர் கொண்ட இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 27 வயதான சுழற்பந்து சகலதுறை வீரரான சஹான் ஆரச்சிகே இலங்கை ஏ அணிக்கு தலைவராக செயற்படவுள்ளார்.

அண்மைக் காலமாக உள்ளூர் போட்டிகளில் சோபித்து வந்த வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் சிராஸும் ஏ குழாத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மினோத் பானுக, நிசான் மதுஷ்க, நுவனிது பெர்னாண்டோ, துஷான் ஹேமந்த, லஹிரு உதார, சாமிக்க குணசேகர மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகிய தேசிய அணி வீரர்களும் குழாத்தில் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களுடன் பவன் ரத்நாயக்க, அஹான் விக்ரமசிங்க, வனுஜ சஹான் மற்றும் நிமேஷ் விமுக்தி போன்ற உள்ளூர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய வீரர்களும் இந்த அணியில் உள்ளனர்.

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் ஏ அணி 5 உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் மற்றும் ஒரு நான்கு நாள் போட்டியில் விளையாடவுள்ளது.

இந்தப் போட்டி தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28) ஹம்பாந்தோட்டையில் ஆரம்பமாகவுள்ளது.

**இலங்கை ஏ குழாம்:** சஹான் ஆராச்சிகே (தலைவர்), மினோத் பானுக, நிசான் மதுஷ்க, நுவனிது பெர்னாண்டோ, துஷான் ஹேமந்த, லஹிரு உதார, சாமிக்க குணசேகர, சாமிக்க கருணாரத்ன, பவன் ரத்நாயக்க, அஹான் விக்ரமசிங்க, வனுஜ சஹான், நிமேஷ் விமுக்தி, மொஹமட் சிராஸ்.

# 'தங்க நீலங்களின் சமர்' மாபெரும் கிரிக்கெட் இன்று



வத்தளை புனித அந்தோனிஸ் மற்றும் வென்னப்புவ புனித ஜோசப் வாஸ் கல்லூரிகளுக்கு இடையிலான முதலாவது மாபெரும் கிரிக்கெட் போட்டி கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் இன்று (26) ஆரம்பமாகவுள்ளது. 'தங்க நீலங்களின் சமர்' என்ற பெயரில் நடைபெறும் இரண்டு நாட்கள் கொண்ட இந்த கிரிக்கெட் போட்டி ஒரு மாத குறுகிய காலத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.

புனித அந்தோனிஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் மற்றும் அதன் கிரிக்கெட் பிரிவுகள் ஏற்பாடுகளை முன்னெடுத்த நிலையில், அதற்கு புனித ஜோசப் வாஸ் கல்லூரி அனைத்து வகையிலும் ஆதரவு அளித்துள்ளது. இந்தப் போட்டிக்கு ஜனஷக்தி குழும நிறுவனங்கள் பிரதான அனுசரணை வழங்குவதோடு மேலும் பல நிறுவனங்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பழைய மாணவர் குழுக்கள் மற்றும் தனி நபர்கள் மற்றும் இரு கல்லூரிகளதும் நலன் விரும்பிகள் போட்டியை நடத்துவதற்கான செலவில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளனர்.



# பணயக்கைதியின் வீடியோவை வெளியிட்டது ஹமாஸ் அமைப்பு



இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின்போது காசாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட இஸ்ரேலிய அமெரிக்கரான ஹெர்ஷ் கோல்ட்பேர்க்கின் வீடியோ ஒன்றை ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

குறுகிய மற்றும் திகதி குறிப்பிடப்படாத அந்த வீடியோவில் 23 வயதான அந்த இளைஞனின் இடது கையின் கீழ் பாகம் இல்லாமல் இருந்தபோதும் உடல் ஆரோக்கியத்துடன் காணப்பட்டார்.

ஒக்டோபர் 7 தாக்குதலின்போது தன்னையும் அச்சத்தில் உள்ள ஏனைய பொதுமக்களை பாதுகாப்பதற்கும் தமது உடலை கவசமாக பயன்படுத்த முயன்றதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் கிட்டத்தட்ட 200 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அந்த வீடியோவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீடியோவுக்கு பதிலளித்திருக்கும் அவரது பெற்றோர்கள் புதிய பணயக்கைதிகள் உடன்படிக்கை ஒன்றை பெறுவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். நோவா இசை விழாவில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட தனது மகனை விடுவிப்பதற்கான பிரசாரத்தில் கோல்ட்பேர்க்கின் தாய் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒக்டோபர் 7 தாக்குதலில் சுமார் 250 பணயக்கைதிகள் கடத்தப்பட்ட நிலையில் தொடர்ந்தும் 133 பேர் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. குறைந்தது 30 பணயக்கைதிகள் உயிரிழந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

# சர்வதேச செய்திகள்

## விண்வெளி ஆயுதப் போட்டியை தடுப்பதில் ரஷ்யா வீட்டோ வாக்கு



விண்வெளியில் அனைத்து நாடுகளும் ஆயுதப் போட்டி ஒன்றை தடுப்பதற்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஒன்றை ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஜப்பானினால் கொண்டுவரப்பட்ட இந்த நகல் தீர்மானம், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட 1967 விண்வெளி உடன்படிக்கையை உறுதி செய்வதாக இருந்தது.

ரஷ்யா விண்வெளியை தளமாகக் கொண்டு செய்மதி எதிர்ப்பு அணு ஆயுதத்தை மேம்படுத்தி வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. எனினும் தற்போதுள்ள உடன்படிக்கையை உறுதியாக கடைப்பிடிப்பதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் கடந்த புதனன்று (24) கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில், 'விண்வெளியை அமைதியான நோக்கத்திற்கு பயன்படுத்துவது மற்றும் விண்வெளியில் ஆயுதப் போட்டி ஒன்றை தடுப்பதற்கு அனைத்து நாடுகளும், குறிப்பாக பிரதானமான விண்வெளி திறன்கொண்ட நாடுகள் பங்களிப்புச் செய்ய வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் 15 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 13 வாக்குகள் கிடைத்ததோடு ரஷ்யா எதிராக வாக்களித்த நிலையில் சீனா வாக்களிப்பதை தவிர்த்தது.

## அமெரிக்காவின் தடைக்கு எதிராக நீதிமன்றம் செல்கிறது 'டிக்டொக்'




அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்குத் தடை விதிக்க வழிவகுக்கும் சட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தை நாடப் போவதாக டிக்டொக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சியூ ஷோ ஸி கூறியுள்ளார். டிக்டொக் செயலிக்குத் தடை விதிக்கும் சட்டமூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

அந்த நடவடிக்கை அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று சியூ குறிப்பிட்டார். டிக்டொக் சமூக ஊடகம் அதன் உரிமையாளரான பைடான்ஸ் நிறுவனத்திடமிருந்து 9 மாதங்களுக்குள் விலக வேண்டும், தவறினால் அமெரிக்காவில் அந்தச் செயலிக்குத் தடை விதிக்கப்படக் கூடும்.

பயனர்களின் தரவுகளைப் பாதுகாக்க டிக்டொக் பல பில்லியன் டொலர் செலவிடுவதாக அவர் கூறினார். டிக்டொக் செயலியின் உரிமை குறித்து அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் நீண்டகாலமாகவே எச்சரித்து வந்தனர். பயனர்களின் தரவுகளை அந்தச் செயலி சீன அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளக் கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

பைடான்ஸ் நிறுவனமும் சீனாவும் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தன.

# காசா மனிதப் புதைகுழியில் மீட்ட சடலங்கள் 395 ஆக அதிகரிப்பு



## விசாரணைக்கு அழுத்தம்: இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை நேற்று 395 ஆக அதிகரித்துள்ளது. இந்த புதைகுழிகள் தொடர்பில் இஸ்ரேலிடம் இருந்து அமெரிக்கா விளக்கம் கோரியுள்ளது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரின் நாசர் மருத்துவமனை வளாகத்தில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெற்றதை அடுத்தே இந்த பாரிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. நேற்றுடன் இங்கு தொடர்ச்சியாக ஆறாவது நாளாகவும் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் என மேலும் உடல்கள் மீட்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் கட்டுகள் மற்றும் வடிகுழாய்கள் இணைக்கப்பட்ட நோயாளிகளின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமனையில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய சுற்றிவளைப்பின் போது நிகழ்ந்த பயங்கரங்கள் குறித்து உயிர் தப்பியவர்கள் விபரித்திருந்தனர். மருத்துவமனைக்கு வெளியில் மக்கள் இழுத்துவரப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும் அவர்கள் விபரித்திருந்தனர்.

இந்நிலையில் இந்த பாரிய புதைகுழிக்கு அருகில் தமது அன்புக்குரியவர்களை தேடி உறவினர்கள் கூடியுள்ளனர். உடல்கள் மோசமாக சிதைந்திருக்கும் நிலையில் சிலர் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளைக் கொண்டு தமது உறவினர்களை அடையாளம் கண்டு வருவதாக அங்குள்ள செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ரீம் சிதான் என்ற தாய் தனது மகனை பல மாதங்களாக தேடி வந்த நிலையில் கடைசியில் இந்த பாரிய புதைகுழியில் இருந்த தனது மகனின் உடலை நேற்று முன்தினம் (24) கண்டுபிடித்துள்ளார். புல்டோசரில் இருந்த மனித எச்சங்களிலேயே தனது மகனின் உடலும் இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

'அவர்கள் என்னை விலகிச் செல்லுமாறு கூறினார்கள், ஆனால் எனது மகன் புல்டோசரில் இருப்பதாக நான் குறிப்பிட்டேன்' என்று சிதான் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். 'அவனை நான் மூன்று மாதங்களாக காணவில்லை, இன்று கண்டுபிடித்து விட்டேன்' என்றும் அவர் குறிப்பிட்டார். இதில் 22 வயதான மகன் நபில் இஸ்ரேலிய வான் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

'நாசர் மருத்துவமனை வளாகத்திற்குள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் தோண்டப்பட்டிருக்கும் பாரிய புதைகுழி எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது' என்று காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசல் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

எனினும் அங்கு துருப்புகள் புதைகுழிகளை தோண்டவில்லை என்று இஸ்ரேலிய இராணுவம் கூறியது.

ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் போரில் காசாவில் பாரிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது இது முதல்முறையல்ல. காசாவில் அல் ஷிபா மருத்துவமனையை சுற்றிவளைத்த இஸ்ரேலிய துருப்புகள் அங்கிருந்து வாபஸ் பெற்ற பின் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக கூறப்படும் சுமார் 400 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, 'எமக்கு பதில்கள் வேண்டும். முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணையை நாம் விரும்புகிறோம்' என்றார்.

'நாசரில் உள்ள இந்த புதைகுழிகள் சில மாதங்களுக்கு முன் காசா மக்களால் தோண்டப்பட்டது' என்று இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் மேஜர் நடேவ் ஷொஷானி குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருக்கும் மருத்துவமனைகள் மீது இஸ்ரேலிய படை தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் முற்றுகை மற்றும் சுற்றிவளைப்புக்கு உள்ளான இரு காசா மருத்துவமனைகளில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழிகள் தொடர்பில் 'சுதந்திரமான, பயனுள்ள மற்றும் வெளிப்படையான விசாரணை' ஒன்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை முன்னதாக அழைப்பு விடுத்திருந்தது.



முற்றுகை நிலத்தின் நாசர் மற்றும் அல் ஷிபா மருத்துவ வளாகங்களில் இருந்து கிடைக்கும் காட்சிகள் பயங்கரமாக உள்ளன என்று மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகர் வொல்கர் டுர்க் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாசர் மற்றும் அல் ஷிபா மருத்துவமனைகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பில் பலஸ்தீன சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தெற்கு காசா நகரான ரபாவில் நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தினர். இதில் நாசர் மருத்துவனையில் மூன்று வெவ்வேறு புதைகுழிகள் க ண்டுபிடிக்கப்பட்டதாக அந்த மருத்துவமனை அமைந்துள்ள கான் யூனிஸ் நகரின் சிவில் பாதுகாப்பு திணைக்கள தலைவர் யெமன் அபூ சொலைமான் குறிப்பிட்டார்.

இதில் ஒரு புதைகுழி பிரேத அறைக்குப் பின்னாலும், மற்றொருன்று பிரேத அறைக்கு முன்னாலும் மேலும் ஒரு புதைகுழி இரத்தச் சுத்திரிப்புக் கட்டடத்திற்கு அருகிலும் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

பாரிய புதைகுழிகளில் உடல்கள் ஒன்றாக அடுக்கப்பட்டிருப்பதோடு களப் படுகொலைகள் இடம்பெற்றிருப்பதை காண்பிப்பதாக உள்ளது என்று அபூ சுலைமான் கூறினார்.

**தீவிரம் அடையும் ரபா தாக்குதல்**

இதேவேளை காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் 202 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றன.

இதில் இஸ்ரேல் படை நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி வரும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் கான் யூனிஸ் நகர் மீதாக தாக்குதல்கள் உக்கிரம் அடைந்துள்ளன.

கிழக்கு ரபாவின் அல் கெனினா பகுதியில் அல் ஜமால் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இஸ்ரேல் நடத்திய குண்டு வீச்சில் ஊடகவியலாளரான முஹமது பசம் அல் ஜமால் உட்பட ஐவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

வடக்கு ரபாவில் அபூ அரார் குடும்ப வீட்டின் மீது இஸ்ரேலிய ஏவுகணை விழுந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர்.

சர்வதேச எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும் ரபா மீதான தரைவழி படையெடுப்பு ஒன்றுக்காக இராணுவம் முன்னேறி வருவதாக இஸ்ரேலிய மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் வாதி காசா பாலத்தில் கூடியிருந்தவர்கள் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரத்தை மேற்கோள் காட்டி வபா செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய காசாவில் இஸ்ரேலின் செல் தாக்குதலுக்கு இலக்கான நால்வரின் உடல்கள் உள்ளூர் மருத்துவமனை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவர்கள் வடக்கு காசாவுக்கு செல்ல முயன்றபோதே கொல்லப்பட்டதாக குடும்ப உறுப்பினர்கள் ஏ.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு காசாவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த ஊருக்கு திரும்புவதை இஸ்ரேல் இராணுவம் தடுத்து வருவதாக பலஸ்தீனர்கள் குறிப்பிடுகின்றனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் குறைந்தது 43 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 7 மாதங்களாக நீடிக்கும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34,305 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 77,293 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் காசாவுக்கான உணவு, நீர், மருந்துகளை முடக்கி இருக்கும் சூழலில் அந்தப் பகுதி உடன் பஞ்சம் ஒன்றை எதிர்கொண்டிருப்பதாக உலக உணவுத் திட்டத்தின் ஜெனீவா அலுவலக பணிப்பாளர் கியான் கார்லோ எச்சரித்துள்ளார்.

'பஞ்ச நிலைமையை நாம் நாளுக்கு நாள் நெருங்கி வருகிறோம். சிறுவர்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு பரவி வருகிறது' என்று அவர் எச்சரித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## அனுராதபுரம் மாநகர சபை

### ‘‘புரவர உதானய’’ நகர்ப்புற வருமானத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்கு சேவைகள் வழங்குதல் – 2024 ஜூன் 21ஆம் திகதி முதல் ஜூன் 29ஆம் திகதி வரை

அனுராதபுரம் மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்படும் ‘‘புரவர உதானய - 2024’’ வேலைத்திட்டத்திற்குத் தேவையான பின்வருமாறு விபரிக்கப்படும் சேவைகளை வழங்குவதற்காக அனுபவம் மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இதன் பொருட்டான விண்ணப்பப் படிவங்கள் 2024-04-25ஆம் திகதி முதல் 2024-05-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் மீளளிக்கப்படாத 3000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி குறித்த விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024-05-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| 1. உற்சவ இடப்பரப்பு மற்றும் அதனை அண்டிய இடப்பரப்புகளுக்கு மின்னொளி மற்றும் மின்சாரம் வழங்குதல் (உருப்படி) | | | வழங்க வேண்டிய காலம் |
|---|---|---|---|
| a | வாகனங்களில் படாத வகையில் உயரத்தில் சிங்க தூண் சுற்றுவட்டம் முதல் ஸ்ரீ மகா போதி மாவத்தையிலுள்ள ஸ்ரீ மகா போதி விகாரை மாளிகை வரை ஒரு பல்ப் தொடர்கொடியில் குறைந்தபட்சம் 200 பல்ப் எனும் வகையில் பல்ப் தொடர் கொடிகள் 3 அடிக்கு 3 அடியில் பல்ப் தொடர்கொடிகளை பொருத்துதல் (மின்சாரம் வழங்கப்படும்) (வகை- LED ஹோன் வைட்) | 1300 தொடர் கொடிகள் | ஜூன் 20ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை |
| b | வாகனங்களில் படாத வகையில் உயரத்தில் சுவர்ணமாலி மகளிர் பாடசாலை பிரதான நுழைவாயில் முதல் இராணுவ வைத்தியசாலை நுழைவாயில் வரை பிரதான வீதியில் ஒரு பல்ப் தொடர்கொடியில் குறைந்தபட்சம் 200 பல்ப் எனும் வகையில் பல்ப் தொடர் கொடிகள் 3 அடிக்கு 3 அடியில் பல்ப் தொடர்கொடிகளை அமைத்தல் (மின்சாரம் வழங்கப்படும்) (வகை- LED ஹோன் வைட்) | 200 தொடர் கொடிகள் | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| c. | உற்சவ இடப்பரப்பிலுள்ள மரங்களுக்கு 200 LED பல்ப் தொடர்கொடிகளைப் பயன்படுத்தி அலங்கரித்தல் | 425 தொடர் கொடிகள் | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| d. | சிங்க தூண் சுற்றுவட்டத்திற்கு குறைந்தபட்சம் 200 பல்ப்களைக் கொண்ட LED பல்ப் தொடர்கொடி (சிவப்பு ஹோன் வைட்) | 25 தொடர் கொடிகள் | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| e. | தலைக்கு மேலான கம்பங்களைப் பயன்படுத்தி உற்சவ இடரப்பரப்பினுள் LED ஸ்ட்ரீட் லைட் பொருத்துதல் (4 வர்ணங்கள்) | 9526 நீள் அடிகள் | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| f. | 200W LED பிளேஷ் லைட் தலைக்கு மேலான கம்பங்களைப் பயன்படுத்தி உற்சவ இடப்பரப்பினுள் பொருத்துதல் | 100 | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| g. | 150W LED பிளேஷ் லைட் தலைக்கு மேலான கம்பங்களைப் பயன்படுத்தி உற்சவ இடப்பரப்பினுள் பொருத்துதல் | 50 | |
| h. | 500W LED பிளேஷ் லைட் தலைக்கு மேலான கம்பங்களைப் பயன்படுத்தி உற்சவ இடப்பரப்பினுள் பொருத்துதல் | 30 | |
| i. | விற்பனைக் கூடம், சிற்றுண்டிச்சாலை, டிக்கட் கருமபீடம், பிரதான மேடை மற்றும் அலுவலகத்திற்கு வயரிங் செய்து இயைபுடைய மின்சார துணைப்பாகங்களைப் பொருத்துதல் | உருப்படி | |
| j. | இடப்பரப்பின் பாதுகாப்பு மறைப்பைச் சுற்றி 150W LED பிளேஷ் லைட் பொருத்தமான வகையில் பொருத்துதல் | 10 | |
| k. | ஸ்கை லைட்கள் பொருத்துதல் | 02 | |
| l. | இலங்கை மின்சார சபையின் தற்காலிக மின் இணைப்பை தேவையான வகையில் பெற்றுக்கொண்டு மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை தேவையான வகையில் பயன்படுத்தி மேற்கூறப்பட்ட a, b இலக்க உருப்படிகள் தவிர்ந்த உற்சவ இடப்பரப்பிற்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குதல் (தேவையான சராசரி வழங்கல் சுமார் 1000 KW வரையாகும். இது தேவைப்பாட்டின் பிரகாரம் மாறுபடலாம் என்பதுடன் தேவைப்பாட்டின் பிரகாரம் வழங்கக்கூடிய இயலுமை இருத்தல் வேண்டும் அல்லது 1000 KW உள்ளாகும் வகையில் இடப்பரப்பைச் சுற்றி மின்பிறப்பாக்கி வழங்குதல். | | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| ஸ்ரீ மகா போதி மாவத்தை, ருவான்வெலிசாய நுழைவாயில் மற்றும் சிங்க தூண் சுற்றுவட்டம் போன்ற இடங்களிலுள்ள சகல மின்சார வழங்கல் நடவடிக்கைகள் முறையாக நிறைவு செய்யப்பட்டு 2024-06-19ஆம் திகதி இரவு பரிசீலனை செய்வதற்காகவும் மேற்கூறப்பட்ட சகல மின்சார வழங்கல் 2024-06-21ஆம் திகதி இரவு பரிசீலனை செய்வதற்காகவும் தயாராகவிருத்தல் வேண்டும். | | | |

| 2. பிரதான மேடை வழங்குதல் | | |
|---|---|---|
| a | உறுதியான சிறந்த நிலையிலுள்ள பலகைகளைப் பரப்பி அதன் மேல் தரை விரிப்பை இட்டு சிறந்த நிலையில் 3 ஏறும் படிகளைப் பயன்படுத்தி மேடையின் கீழ்ப் பகுதியை அலங்காரமாக இருக்கும் வகையில் மறைத்து சதுர ட்ரஸ்ட் பார் சகிதம் 60’x32’ அளவிலான மேடையுடன் (with arre), (without arre 40’x32’) (drum flat from 08’x08’) (வர்ண புகைப்படம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) | ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| b | மேடையின் பின்புறம் மற்றும் மேற்புறம் LED Panel Mapping with run way front wall - 32’x08’ | ஜூன் 22ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| c | 2024.6.28 மற்றும் 29 ஆகிய இரு நாட்களிலும் 60’x32’ அளவிலான மேலதிக மேடை (with arre), மேடைக்கு முன்புறம் மற்றும் இரு புறமும் LED திரைகளைப் பொருத்துதல் (வர்ண புகைப்படம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) | ஜூன் 28ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை |
| மேடையின் சகல வேலைகளும் 2024-06-21ஆம் திகதி நண்பகல் 12.00 மணியாகும்போது இறுதியாக்கப்பட்டு ஒப்படைத்தல் வேண்டும். | | |
| மேடையில் நிலைமை தொடர்பில் பொறியியலாளரொருவரின் சான்றுபடுத்தும் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | | |

| 3. நெளிவுள்ள தகடு மறைப்பு அறைகளை வழங்குதல் | | |
|---|---|---|
| a | நெளிவுள்ள தகடு அறை பக்க மறைப்புகள் சகிதம் பொருத்துதல் (10’x10’அளவில்) | 25 அறைகள் |
| b | அலுவலக அறையொன்றை அமைத்தல் (12”x48”) தாழ்பாள் போடக்கூடிய இரண்டு கதவுகள் சகிதம் (உணவு அறை / ஓய்வு அறை சகிதம்) | உருப்படி |
| c | பிரதான மேடைக்கு அருகில் (12”x12”) அளவிலான 3 கூடாரங்களை நிர்மாணித்தல் (கதவுகள் சகிதம்) | உருப்படி |
| இந்த சேவையை 2024-06-21ஆம் திகதி முதல் 2024-06-29ஆம் திகதி வரை வழங்குதல் வேண்டும். | | |

| 4. உற்சவ இடப்பரப்பைச் சுற்றி பாதுகாப்பு மறைப்பு அமைத்தல் | | |
|---|---|---|
| a | 28 கேஜ் நெளிவுள்ள தகடு, 10 அடி உயரத்திற்கு மறைத்தல் (செங்குத்தாக மற்றும் குறுக்காக GI குழாய் க்லெம்ஸ் மூலம் பொருத்துதல் வேண்டும்) | 2900 நீள் அடி |
| b. | கல்வனைஸ்ட் குழாய்களைப் பயன்படுத்தி 3.5 அடி உயரத்திற்கு 10 அடிக்கு 10 அடி செங்குத்தாக மற்றும் குறுக்காக 02 GI குழாய்களைப் பயன்படுத்தி தேவையான இடங்களில் வேலி பொருத்துதல் (GI குழாய் க்லெம்ஸ் மூலம் பொருத்துதல் வேண்டும்) | 360 நீள் அடி |
| c. | நுழைவாயிலுக்கு அருகில் GI குழாய்களைப் பயன்படுத்தி உள்வருவதற்கான வரிசை அமைத்தல் மற்றும் (10”x10”) 2 கெனபிகளை மின்னொளி சகிதம் பொருத்துதல். | உருப்படி |
| d. | டிக்கட் கருமபீடம் 10 வீதம் 2 தொகுதிகளைப் பொருத்துதல் | உருப்படி |
| இந்த சேவையை 2024-06-21ஆம் திகதி முதல் 2024-06-29ஆம் திகதி வரை வழங்குதல் வேண்டும். | | |

| 5. பொழுதுபோக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் | |
|---|---|
| a | இயைபுடைய விளையாட்டின் / உபகரணத்தின் பெயர் |
| b | தெளிவான 03 புகைப்படங்கள் |
| c | இந்த உபகரணங்கள் மூலம் சேவை வழங்கப்படும் காலம் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி வருடம் |
| d | கடந்த வருடம் மற்றும் இந்த வருடத்தினுள் சேவை வழங்கிய உற்சவங்கள் |
| e | டிக்கட் ஒன்றின் விலை |
| f | ஒரு டிக்கட்டிற்கான பணத்தில் அனுராதபுரம் மாநகர சபைக்கு செலுத்தும் விகிதாசாரம் |
| g | தேவையான இடப்பரப்பு (சதுர அடி) |
| மேற்கூறப்பட்ட விபரங்கள் சகிதம் பொழுதுபோக்கு விளையாட்டு உருப்படிகளை வழங்குவதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (இயைபுடைய உபகரணங்களின் புகைப்படமொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.) | |
| இந்த உபகரணங்களுக்குத் தேவையான இடம், மின்சாரம் வழங்கப்படும். அனுபவம், உபகரணங்களின் நிலை, பாதுகாப்பு உறுதிப்பாடு, அனுராதபுரம் மாநகர சபைக்கு வழங்கும் விகிதாசாரம் போன்றவற்றை கவனத்திற் கொண்டு பொழுதுபோக்கு விளையாட்டு உருப்படிகள் தெரிவு செய்யப்படும். | |
| சகல விளையாட்டு உபகரணங்களின் பாதுகாப்பு நிலைமை, மின்சார பாதுகாப்பு என்பன உறுதி செய்யப்படல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு தலைக் கவசம், இடுப்புப் பட்டி என்பன தேவையான வகையில் வழங்குதல் வேண்டும். | |

| 6. ஒலிபெருக்கி இயந்திரங்கள் வழங்குதல் | | |
|---|---|---|
| a | ஹரிஸ்சந்திர விளையாட்டு மைதானம் முதல் வங்கிச் சுற்றுவட்டம் வரை, பிரதான வீதி ஆலங்குளம் முதல் விளையாட்டரங்கு வரை, ஜயந்தி விகாரை முதல் சிங்க தூண் வரை ஜயந்தி மாவத்தை, மார்கட் சுற்றுவட்டம் முதல் சதொச வரை, 45 - 50 எண்ணிக்கையான ஒலிபெருக்கி இயந்திரங்கள் மூலம் 2024-06-22ஆம் திகதி முதல் 2024-06-29ஆம் திகதி வரை உள்ளடக்குதல் வேண்டும். | உருப்படி |
| b | களியாட்ட இடப்பரப்பில் 08 ஒலிபெருக்கி இயந்திரங்களைப் பயன்படுத்துதல் | உருப்படி |
| c | களியாட்ட இடப்பரப்பு அமைந்துள்ள விளம்பர கூடத்திற்கு அருகில் ஒலிபெருக்கி இயந்திரமொன்றை வைத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள் சகிதம் விளம்பர கூடமொன்றை நிறுவுதல். | உருப்படி |
| 7. ஒலிபெருக்கி முறைமை வழங்குதல் (இசை நிகழ்ச்சிகளுக்காக) | | |
| a | 2024-06-22ஆம் திகதி முதல் 2024-06-29ஆம் திகதி வரை தேவையான ஒலிபெருக்கி முறைமைகளை Sound System வழங்குதல் | |
| | இசைக் குழுக்களுக்காக ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்கும்போது இருக்க வேண்டிய தேவைப்பாடுகள்<br>• Main PA Sound system<br>• Delay Sound system 02<br>• Back Line (மேடை ஒலிபெருக்கி இயந்திரம்)<br>• Full Light system<br>• Generator<br>ஒலிபெருக்கி இயந்திரங்கள் தேவையான நாட்கள் மற்றும் தேவைப்பாடுகள்<br>• 2024-06-22 - Full Sound system<br>• 2024-06-23 - Full Sound system<br>• 2024-06-24 - Full Sound system<br>• 2024-06-25 - Delay Sound system 02<br>• 2024-06-26 - Full Sound system<br>• 2024-06-27 - Full Sound system<br>• 2024-06-28 & 29 - Main PA Sound system 02 and PA Sound system 02 (எடேக் நிகழ்ச்சிக்கு) | உருப்படி |

1. இதன் பொருட்டான விண்ணப்பப் படிவங்கள் 2024-04-25ஆம் திகதி முதல் 2024-05-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் மீளளிக்கப்படாத 3000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி குறித்த விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024-05-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும். அன்றைய தினம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. அனுராதபுரம் பொசன் உற்சவம் மற்றும் புரவர உதாயன நிகழ்ச்சிகளுக்காக வெற்றிகரமான ஒரு முறையாவது சேவையை வழங்கியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பெறுமதியின் 2% விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறியாக 60 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் அனுராதபும், மாநகர சபை, மாநகர ஆணையாளருக்கு வழங்குதல் வேண்டும்.
5. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதானால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் கட்டாயமாகும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக் ‘‘மாநகர ஆணையாளர், மாநகர சபை, அனுராதபுரம்’’ எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாக ஒப்படைப்பதானால் அனுராதபுரம் மாநகர சபையின் மாநகர கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘புரவர உதானய 2024 - சேவைகள் வழங்குதல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 025-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மற்றும் மாநகர சபையின் பின்வரும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர் - 025-2222276**
**கணக்காளர் - 025-2227745**
**பிரதான வருமான பரிசோதகர் - 071-2365971**

**டபிள்யூ.எம். ருவன் விஜேசிங்க,**
**2024-04-22ஆம் திகதி,**
**அனுராதபுரம் மாநகர சபை அலுவலகத்தில்.**

---

# மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல் - 2024

மடுல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையை 2024.06.01 முதல் முப்பது வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான பதிவு செய்துள்ள தொண்டர் நிறுவனங்கள் அல்லது நிரந்தரப் பதிவு உள்ள தனிப்பட்ட பதிவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் 2024.05.17 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படுவதுடன் அன்றே அவ்வேளையிலேயே அவ்விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு குறித்த படிவக் கட்டணங்கள் மற்றும் பெறுகை பிணை வைப்புத் தொகையை செலுத்தி 2024.04.26 முதல் 2024.05.16 பி.ப. 2.00 வரை மாத்திரம் மடுல்ல பிரதேச சபையில் பெறுகை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | விபரம் | குறைந்த பட்ச கேள்வி (வெட் இன்றி) ரூபா. | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) |
|---|---|---|---|---|
| 1. | மடுல்ல புதிய பஸ் நிலைய தரைமாடி இல.04 | 1,320,000.00 | 150,000.00 | 10,000.00 |
| 2. | மடுல்ல புதிய பஸ் நிலைய தரைமாடி இல.08 | 690,000.00 | 50,000.00 | 5,000.00 |

பெறுகை நிபந்தனைகள் பற்றிய மேலதிக விபரங்களை படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் போது மடுல்ல பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ.எம்.அநுர சுதர்ம பண்டார**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மடுல்ல**

**2024.04.26**
**மடுல்ல பிரதேச சபை**
**தொடர்பு: 055 - 2275186**
**055 - 3141311**
**055 - 2275187**

---

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா), பேராதனை

தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொதுவைத்தியசாலை (போதனா) பேராதனை இனால் கட்டிடங்கள் மற்றும் வைத்தியசாலையின் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கு குறித்த கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக 2024 ஏப்ரல் 26 முதல் 2024 மே 21 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. சேவைக்காலப் பயிற்சி மருத்துவ விடுதியின் கூரை மற்றும் ஏனைய அத்தியாவசிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல்.
02. வைத்தியசாலையின் கழிவு முகாமைத்துவ நிலையத்தைப் புதுப்பித்தல்.
03. விரிவுரை மண்டப இல.01 கலந்துரையாடல் அறையாக மேம்படுத்துதல்.
04. வைத்தியசாலையின் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரையை பழுதுபார்த்தல்.
05. நடமாடும் பெட்டி (Container Box) பழுதுபார்த்தல்.
06. வைத்தியசாலையின் உள்ளக தொலைபேசி அமைப்புகளை நாளதுவரைக்கு உட்படுத்துதல்.
07. வைத்தியசாலையின் CCTV கெமரா அமைப்பை விரிவாக்குதல்.
08. வைத்தியசாலையின் மின் அமைப்பு சார்ந்த பழைய Panel Board ஐ அகற்றிவிட்டு புதிய Panel Board ஐ இடல்.
09. மின் பிறப்பாக்கி சேவை மற்றும் பராமரிப்பு 2024/2025
10. Laptop கனணி, Desktop கனணி, 2D Bar Code renders, Ink Jet Printers (Black & White) கொள்வனவு செய்தல்.

இவ்வேலை விடயத்தின் சகல தகவல்களையும் 2024.04.26 முதல் 2024.05.21 வரை பேராதனை பொது வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இணையதளமான www.peradeniya hospital.health.gov.lk இடமிருந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன், பெறுகை விடயங்கள் சம்பந்தமான பெறுகைக்கு முன்னரான கூட்டம் (இல.01 முதல் இல. 05 வரை வேலை விடயங்கள் சார்பாக 2024.05.07 மு.ப. 10.30 இற்கு மற்றும் இல. 06 முதல் 09 வரை வேலைகள் சார்பாக அன்றே பி.ப. 1.30 இற்கு) பேராதனை பொது வைத்தியசாலையின் கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

**மருத்துவர் எச்.எம்.ஏ.திலக்கரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா)**
**பேராதனை**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)**

## Desktop கனனி இயந்திரங்கள் 45 மற்றும் Laptop கனனி இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தல்

### கேள்வி இலக்கம் : PRDA/WP/2024/PRO/23

இவ் அதிகாரசபையின் அலுவலக தேவைக்காக, Desktop கனனி இயந்திரம் 45 மற்றும் Laptop கனனியொன்றை கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான வழங்கல்கள் மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2024.04.29 முதல் 2024.05.13 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை ரூ.1000.00+2.5%+18% மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உற்பட்டு (அதிகாரசபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கி/காப்புறுதி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2024.05.14 பி.ப.2.30 ஆவதுடன், கேள்விகள் திறத்தல் மேற்கண்டவாறு இவ் அலுவலகத்தில் இடம்பெறும்.
05. இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12,**
**தொலைபேசி இலக்கம்: 011 - 2321980**

The Housewives’ companion
Classifieds on
Daily News

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு
## அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவகம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

01. பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவகத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

**பொருட்களின் அட்டவணை**

| இல. | விலைமனு இலக்கம் | பொருள் | எண்ணிக்கை | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | விலைமனுப் பிணை செல்லுபடி யாகும் காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| 01. | NIPIM/AP/AC/2024/7/1/1 | Ozone Generator | 01 | 42,000.00 | 2024.09.05 வரையும் | 2,000.00 |
| 02. | NIPIM/AP/AC/2024/7//2/3 | Disk Mills | 10 | 26,250.00 | 2024.09.05 வரையும் | 2,000.00 |
| 03. | NIPIM/AP/AC/2024/7/2/4 | Parboiling vessels | 75 | 28,125.00 | 2024.09.05 வரையும் | 2,000.00 |
| 04. | NIPIM/AP/AC/2024/7/4/4 | Lecture Hall Chairs | 200 | 40,250.00 | 2024.09.05 வரையும் | 2,000.00 |

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அனுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவகம், கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 025-3230092)மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024.04.26 ஆம் திகதியிலிருந்து 2024.05.20 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
04. 2024.04.26 ஆம் திகதியிலிருந்து 2024.05.20 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அனுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்குப் பின்னரான நிறுவக பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
05. விலைமனுக்கள் 2024.05.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பணிப்பாளர், அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவகம், ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம் என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவக நிதிப் பிரிவில் வைக்கப்படுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
06. விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தனித்தனியாக தயாரிக்கப்பட்டு அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பொருளின் பெயர் மற்றும் விலைமனு இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
07. இந்த விடயம் தொடர்பாக அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகத்தின் பிராந்திய பெறுகை குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
08. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
09. ஒவ்வொரு விலைமனுவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.09.05 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு, அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகம், அனுராதபுரம்.**
**விசாரணைகள்: 025-3230000, 025-3230092**

# விலைமனுக் கோரல்

## ஆயுர்வேதத் திணைக்களம்

**ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 06 வைத்தியசாலைகளுக்கு சமைக்கப்படாத உணவுப் பொருட்கள் மற்றும் அம்பாறை - சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு மட்டும் சமைத்த உணவு வழங்கும் பொருட்டு**

01. மஹரகம, நாவின்ன, பழைய கொட்டாவ வீதியில் அமைந்துள்ள ஆயுர்வேதத் திணைக்களம், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் 2024/2025ஆம் வருடங்களில் நோயாளர்கள் மற்றும் கனிஷ்ட பணியாளர்களுக்கு இங்கு 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 6 வைத்தியசாலைகளுக்குத் தேவையான சமைக்கப்படாத உணவுப் பொருட்களையும் அம்பாறை - சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு மட்டும் சமைத்த உணவுகளை வழங்குவதற்கு சான்றுபடுத்தக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மற்றும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர்கள் மற்றும் பிராந்திய வழங்குநர்கள் ஒரு வைத்தியசாலைக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால் ஆயுர்வேதத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு பின்வரும் அட்டவணையில் அந்தந்த வைத்தியசாலைகளுக்கு இயைபாக குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-04-26ஆம் திகதி முதல் 2024-05-14ஆம் திகதி வரையான சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தினுள் ஆயுர்வேதத் திணைக்களத்தின் வழங்கல் பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். dofayurwedasupply@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மேற்கூறிய தகவல்கள் உள்ளடங்கும் வகையில் வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் இலவசமாக விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. அந்தந்த வைத்தியசாலைகளுக்கு இயைபான உணவு மதிப்பீடுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் விலைமனுதாரர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் என்பன விலைக்கோரல் மாதிரிப் படிவங்களுடன் வழங்கப்படும்.

04. ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதானால் அதன்பொருட்டு ஒவ்வொரு வைத்தியசாலைகளின் பெயருக்கு எதிரில் தரப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணக் கட்டணம் மற்றும் விலைக்கோரல் பிணை முறி என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.

| தொ. இல. | வைத்தியசாலையின் பெயர் | விலைக்கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை - பொரளை | 3,500.00 | 207,000.00 |
| 02 | கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை - யக்கல | 1,000.00 | 48,000.00 |
| 03 | ஆயுர்வேத போதனா வைத்தியசாலை - கைதடி | 1,000.00 | 36,000.00 |
| 04 | சமல் ராஜபக்ஷ ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை - ஹம்பாந்தோட்டை | 1,000.00 | 40,000.00 |
| 05 | ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை - நாவின்ன | 1,000.00 | 88,000.00 |
| 06 | ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை - மதவாச்சி | 1,000.00 | 10,000.00 |
| 07 | சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை - அம்பாறை | 1,000.00 | 34,000.00 |

05. மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் / காப்புறுதி நிறுவனமொன்றில் பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரியிலுள்ள ஆயுர்வேத ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும். (2024-05-16ஆம் திகதி முதல் 2024-08-14ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்)

06. விலைமனுக்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து ஒவ்வொரு பிரதியையும் வெவ்வேறு உறைகளில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் ............................................ வைத்தியசாலைக்கு சமைக்கப்படாத உணவுப் பொருட்கள் / சமைத்த உணவுகளை வழங்குதல் 2024/2025'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு உறையிலும் ''மூலப்பிரதி'' எனவும் மற்றையதில் ''இரண்டாம் பிரதி'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் ஒரே உறையில் இட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஆயுர்வேதத் திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியிலுள்ள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

07. விலைமனுக்களை இலவசமாக ஆயுர்வேதத் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் பொதுவான கடமை நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | - 2024 மே 14 பி.ப. 2.30 |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | - 2024 மே 16 மு.ப. 10.00 |
| இதற்கு இயைபான பெறுகை முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் | - 2024 மே 09 மு.ப. 10.00 |

09. www.promise.lk எனும் இணையதளத்தில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் அந்த இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

10. முழுமையற்ற விலைமனுக்கள் மற்றும் இணைத்து அனுப்ப வேண்டிய ஆவணச் சான்றுகளை முறையான வகையில் சான்றுபடுத்தப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

11. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

12. இது தொடர்பான மேலதிக தகவல்களை ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்காளர் (வழங்கல்) / (தொலைபேசி இல. 011 2847556) / பிரதான கணக்காளர் (தொலைபேசி இல. 011-2840582) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஆயுர்வேதத் திணைக்களம்,**
**பழைய கொட்டாவ வீதி,**
**நாவின்ன,**
**மஹரகம.**

Daily News Classifieds, the Housewives' companion

# விலை மனுக்கோரல்

## பொது பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை பொலிஸ்

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பொலிஸ் தலைமையகத்தின் கட்டிடப் பிரிவின் பணிப்பாளரிடம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொ/ இல | செயற்திட்டம். | செயற்திட்ட காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | மனுக்காப்புறுதிப் பிணைத்தொகை (ரூ.) | CIDA தர நிறுவனப் பதிவு | மீளச்செலுத்தப் படாத தொகை (ரூ). |
|---|---|---|---|---|---|---|
| 01 | பம்பலபிட்டிய பொலிஸ் நிலையத்தில் உள்ள நீர்த் தாங்கியை புதுப்பித்தல் **LA/B3/28/23** | 120 | 5.08 | 76,000.00 | C7 மற்றும் C8 (கட்டிடம்) | 3,500.00 |
| 02 | கொழும்பு 05, கெப்பட்டிபொல மாவத்தை, C-69 காணப்படும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் இல்லத்தின் மேல் மாடியில் தங்குமிடம், குளியலறை மற்றும் அலுமாரி போன்றவற்றற்கு வர்ணம் பூசுதல் **LA/B3/16/23** | 120 | 7.01 | 80,000.00 | C6 மற்றும் C7 (கட்டிடம்) | 2,550.00 |
| 03 | கொழும்பு 01, சைத்திய வீதியில் அமைந்துள்ள "சமுதுர சிசில" கனிஷ்ட பொலிஸ் அதிகாரியின் இல்லத்திற்கு வர்ணம் பூசுதல் **LA/B3/18/23** | 150 | 10.89 | 160,000.00 | C5 மற்றும் C6 (கட்டிடம்) | 3,500.00 |
| 04 | கொச்சிபத்தான பொலிஸ் காவல் நிலைய கனிஷ்ட பொலிஸ் அதிகாரியின் இல்லத்தினை சுற்றுலா விடுதியாக மாற்றுதல் **LA/B1(B)/22/19** | 180 | 47.61 | 700,000.00 | C4 மற்றும் C5 (கட்டிடம்) | 11,900.00 |

1. மேலே மதிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்காக 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டவை. அத்தகைய திட்டங்களுக்கான மனுக்களை கொள்வனவு செய்ய விரும்பும் மனுதாரர்கள் மனு திறக்கும் நேரத்தில் மனு ஆவணங்களுடன் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த PCA/03 சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
2. கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலக தொலைப்பேசி எண் **0112 013 184** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மனு ஆவணங்களை, வாரத்தில் அலுவலக நாட்களில் **2024.04.26** ஆம் திகதி முதல் **2024.05.16** வரை **0900** மணி முதல் **1500** மணி நேரம் வரை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும். மனுதாரர்கள் மீள் செலுத்தப்படாத கட்டணத்தை பணிப்பாளருக்கு (கட்டிடம்) பணமாக செலுத்துவதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனுக்கள் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.
4. மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து மட்டுமே பெற்றுக்கொண்ட "பொலிஸ் மா அதிபர்" **(IGP)** என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை **2024.09.13** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **119 நாட்கள்** வரையாகும்).
5. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் 2024.05.17 ஆம் திகதி 1000** மணித்தியாலங்களுக்கு முன் **கொழும்பு 01 "பொலிஸ் தலைமையகம்" ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளர் (கட்டிடம்) அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழு சார்பாக,**
**பணிப்பாளர் (கட்டிடம்),**
**பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

# கேள்விக்கான அழைப்பு

## கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
## சபரகமுவ மாகாண சபை

சபரகமுவ மாகாண பாடசாலைகளுக்குத் தேவையான கீழ்க்காணும் மரத்தளபாடங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குவதற்கு தகைமை மற்றும் ஆற்றல் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து சபரகமுவ மாகாண சபையின் கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விடயங்கள் அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரால் தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**பெக்கேஜ் 01**

| உருப்படியின் இலக்கம் | விபரம் | அளவு | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | Laptop Computers | 840 | 2,500,000.00 | 35,000.00 |

**பெக்கேஜ் 02**

| உருப்படியின் இலக்கம | விபரம் | அளவு | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | Desktop Computers | 21 | 63,000.00 | 7,000.00 |
| 02 | Photocopiers | 43 | 107,500.00 | |
| 03 | Access Points | 52 | 20,800.00 | |
| 04 | Smart Panel Boards | 22 | 121,000.00 | |
| 05 | UPS 1200VA | 22 | 11,000.00 | |
| 06 | Smart TV | 10 | 30,000.00 | |
| 07 | UPS 650VA | 21 | 3,150.00 | |
| 08 | Portable Speakers | 20 | 20,000.00 | |
| Total | | | **376,450.00** | |

**பெக்கேஜ் 03**

| உருப்படியின் இலக்கம் | விபரம் | அளவு | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூ. | மீளளிக் கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | Laptop Tables | 840 | 294,000.00 | 7,000.00 |
| 02 | Student Chairs | 908 | 143,000.00 | |
| 03 | Teachers Tables | 61 | 20,900.00 | |
| 04 | Teachers Chairs | 36 | 5,400.00 | |
| 05 | Cupboards | 156 | 76,000.00 | |
| Total | | | **539,300.00** | |

மேலதிக விபரங்கள் www.moe.sg.gov.lk என்ற இணையதளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் மற்றும் பரீட்சித்தல் 2024.04.26 முதல் 2024.05.20 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையாவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2024.05.21 மு.ப. 11.00 இற்கு ஆகும். கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.05.09ம் திகதி சபரகமுவ மாகாண கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் மு.ப. 10.00 முதல் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
2024.04.26
**045-2222542**

## வரையறுக்கப்பட்ட ரிகில்லகஸ்கட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## ரிகில்லகஸ்கட

# மீட்கப்படாத தங்க நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்றல்

வ/ப ரிகில்லகஸ்கட ப.நோ.கூ. சங்கத்தின் ரிகில்லகஸ்கட, பதியபெலல்ல, ஹேவாஹெட்ட, பல்லேபோவெல, எலமுல்ல, வராகலவிட்ட, மந்தாரம நுவர, கோணதெலே, உதலுமட, தெஹிபே, ஹாலிஎல, ஹப்பதரவ ஆகிய கிராமிய வங்கிகளில் 2022.05.01 முதல் 2023.02.28 வரை (அவ் இரு தினங்களும் அடங்கலாக) அடகு வைக்கப்பட்ட இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் 2024.05.18 மற்றும் 2024.05.19 ஆகிய இரு தினங்களிலும் மு.ப. 9.00 முதல் இச் சங்கத்தின் ரிகில்லகஸ்கட தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கௌரவ தலைவர்,**
**வ/ப ரிகில்லகஸ்கட ப.நோ.கூ. சங்கம்,**
**ரிகில்லகஸ்கட.**
**தொ.பே. 081-2365580**

2024.04.25

## ஆனமடுவ பிரதேச சபை

# 2025ம் ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல்

ஆனமடுவ பிரதேச சபையின் 2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை தயாரிக்கும் போது மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்பட வேண்டிய, அதிகாரப் பிரதேசத்திற்கு அவசியமான அபிவிருத்தி முன்மொழிவுகளை 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன் செயலாளர், ஆனமடுவ பிரதேச சபை, சிலாபம் வீதி, ஆனமடுவ என்ற முகவரிக்கு அல்லது anamaduwaps@ymail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**எச்.ஜே.எம்.எம்.எஸ். ஜயசுந்தர**
**செயலாளர்,**
**ஆனமடுவ பிரதேச சபை**
**தொ.பே.இலக்கம் : 032 - 2263275**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு
## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
### திருகோணமலை சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் செயல்முறை நீர் முறைமையை நிர்மாணித்தல்
### B/21/2024

1. திருகோணமலை சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் செயல்முறை நீர் முறைமையின் நிர்மாண வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
   இந்த வேலையின் நிர்மாணக்காலம் பத்து வாரங்களாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மற்றும் CIDA நிறுவனத்தின் கட்டிட நிர்மாணம் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 மற்றும் C4 அல்லது நீர்க்குழாய் வேலைகள் மற்றும் வடிகாலமைப்பில் EM2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதால், 04/2016(ii)ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-05-07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு வேலைத் தளத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்த முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.
5. விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தை (ஒரு தொகுதிக்கு ரூபா 8,267.88 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தி எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-05-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024-05-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
   தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011-5455369 அல்லது 011-5455288 எனும் தொலைபேசி இலக்கங்களை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 5455335**

## இறுதி விருப்பாவணம் இல்லாத ஆதனத்திற்காக உரிமைத்துவத்தை முன்வைக்குமாறு விடுக்கும் அறிவித்தல்

### 1998 இல. 21 எனும் உரிமைத்துவம் பதிவு செய்யும் சட்டம் 55வது அத்தியாயம்

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம கிராமத்தில் கெடஸ்தர் வரைபடம் இலக்கம் 520016 வலய இலக்கம் 01 துண்டு இலக்கம் 0038 எனும் காணிகளுக்குச் சொந்தக்காரரான இல. 46/75, சந்துன் உயன, மாபுல்கொட, பன்னிபிட்டிய (முகவரி) எனும் முகவரியில் வசித்த திஸ்னா கல்யாணி ரத்நாயக்க (முழுப்பெயர்) என்பவர் 2024-02-02ஆம் திகதி இறந்து விட்டதால், அவரின் வாரிசுகள் 2024-05-12ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாவது ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம முகவரியில் அமைந்துள்ள காணி உரிமைத்துவ நிருணய பிரதேச அலுவலகத்திற்கு முன் தோன்ற வேண்டும்.

**ஆணையாளர் நாயகம், காணி உரிமைத்துவ நிருணயத் திணைக்களம்.**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
## சுத்திகரிப்புப் பிரிவு
### சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்தின் தோட்டப் பராமரிப்பிற்கு தொழிலாளர்களை பணிக்கமர்த்துதல்

**கேள்விக் குறியீட்டு இல. – PD/SER/02/2024**

12 மாதங்களுக்கு சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்தின் தோட்டத்தைப் பராமரிப்பதற்கு தொழிலாளர்களை பணிக்கமர்த்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் htpp://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2024-05-15ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2024-05-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

# Western Province Provincial Road Development Authority

**(Ministry of Provincial Roads, Transport, Co-operative Development and Trade, Housing and Constructions, Estate Infrastructure facilities, Industries and Rural Development - Western Province)**

## Invitation to Bid for Computation and Submission of Corporate Income Tax Returns

| Bid No. | Description | Non refundable Tender Document Fee (Rs.) | Value of Bid Security | |
|---|---|---|---|---|
| | | | Cash (Rs.) | Bank (Rs.) |
| PRDA/WP/PRO/2024/22 | Invitation to bid for computation and submission of Corporate Income Tax Returns. | 1000 + SSCL 2.5 % + VAT 18 % | 20,000.00 | 40,000.00 |

01. Invitations are called from experienced firms of chartered accountants, those who are providing corporate income tax consultancy services,to compute the income tax liability for years of assessments 2020, 2021 and 2022 of Western Province Provincial Road Development Authority (WPRDA) and file Income Tax Returns with Commissioner General Inland Revenue (CGIR).

**The audited financial statements are available,**

**The selected tax consultant is required to,**

1. Assess / compute corporate income tax liability of WPRDA for aforesaid years of assessment
2. File returns of income tax with Commissioner General Inland Revenue (CGIR) along with the required schedules of calculations and explanations for the same periods as required by CGIR.
3. Represent WPRDA whenever necessary for any possible callings by Commissioner General Inland Revenue on filing returns of income taxes and schedules for aforesaid years of assessment.
4. Sets of bid documents for this may be obtained from the Procurement Division of this authority upon payment of the above mentioned tender form fee between 9.00 a.m. - 2.45 p.m. from 26.04.2024 until 10.05.2024. Bid Security may either be paid in cash or submitted by a bank guarantee as per the conditions mentioned in the bid documents to the value mentioned above.
5. Please submit your Quotations for each of the aforesaid years of assessment separately. Quotation should be opened at 2.30 p.m. on 13.05.2024 and agents or their accredited representatives may be present at the time of the opening of tenders.
6. Quotations should be addressed to **Chairman, Provincial Road Development Authority (W.P.), No. 59, St. Sebastian Hill, Colombo 12. (011-2321980).**

**Chairman,**
**Provincial Road Development Authority (W.P.),**
**No. 59, St. Sebastian Hill, Colombo 12.**
**(011-2321980)**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

The Housewives' companion
Classifieds on
Daily News

## விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை

### பதவி வெற்றிடங்கள் / 2024

# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் மாதிரி தென்னந் தோட்டங்கள் (மா.தெ.தோ) சேவையில் உதவித் தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ) JM - 1-2 (ஒப்பந்தம்) இற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : உதவித் தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ) JM - 1-2 (ஒப்பந்தம்)**

உதவி முகாமையாளர் (தோட்டம்) - மா.தெ.தோ பதவிக்காக செயற்பாட்டின் அடிப்படையில் வருடாந்தம் நீடிப்பதற்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 வருடத்திற்காக உதவித் தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ) JM 1-2 இற்காக சேர்த்துக் கொள்ளல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக் கொண்ட விவசாய/ பெருந்தோட்ட முகாமைத்துவப் பட்டம் மற்றும் அரச அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் தென்னந் தோட்ட முகாமைத்துவம் பற்றிய ஒரு வருட (01) சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- செயற்பாட்டின் அடிப்படையில் வருடாந்தம் நீடிப்பதற்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 வருடங்களுக்கு உதவித் தோட்ட முகாமையாளர் (மா.தெ.தோ) JM 1 -2 பதவிக்கு சேர்த்துக் கொள்ளல்
- சம்பளம் : ரூ. 43355/- கனிஷ்ட முகாமையாளர் (JM 1-2) சேவை வகுதியில் ஆரம்ப சம்பளம்
- பதவி எண்ணிக்கை : 04 (ஒப்பந்தங்கள்)
- சேர்த்துக் கொள்ளும் முறை : கட்டமிடப்பட்ட நேர்முகத் தேர்வு வேறு நிபந்தனைகள்

**ஏனைய நிபந்தனைகள் :**

I. சகல விண்ணப்பதாரிகளும், இலங்கை பிரஜையாக இருத்தல்
II. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல், உளத் தகைமையைக் கொண்டிருத்தல்
III. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்:**

அதன் பிரகாரம் 2024.05.10ம் திகதிக்கு மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் இணையதளத்தில் உள்ள மாதிரிக்கு அமைவாக அல்லது தம்மால் தயாரிக்கப்பட்ட மாதிரியொன்றைப் பாவித்து விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். அவ்வாறே கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்கள் அடங்கிய அத் தகைமைகளை உறுதி செய்யக் கூடிய சான்றிதழ்களின் உறுதி செய்த பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியைக் குறிப்பிடுதல் கட்டாயமானது. அவ்வாறு வேண்டப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சகல விண்ணப்பங்களும் 2024.05.10ம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு, "தலைவர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது பற்றி குறித்த சேர்த்துக் கொள்ளும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இப் பதவி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் அதற்கான தகைமையற்றதாகக் கருதப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படும்.

**தலைவர்,**
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல,**
**மேற்படி பதவிக்காக குறித்த விண்ணப்பப்படிவத்தை கீழ்க்காணும் இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அறிவிக்கிறேன். ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின் தம்மால் தயாரிக்கப்பட்ட மாதிரியொன்றை பாவித்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவித்துக் கொள்கிறேன்.**

https://coconutsrilanka.lk

## போதனா வைத்தியசாலை – இரத்தினபுரி

# கேள்விக்கான அழைப்பு

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2024ம் ஆண்டிற்குத் தேவையான கீழ்க்காணும் பெறுகைக்காக தகுதியும் தகைமையும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | கோவை இலக்கம் / கேள்வி இலக்கம் | உருப்படி/ விபரம் | குறைந்தபட்ச தகைமைகள் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | THR/FBA/GEN/01/2024 | டயர் கொள்வனவு செய்தல் | - | 25,000.00 |
| 02 | THR/FBA/GEN/04/2024 | உரிமைகோரப்படாத சடலங்கள் அகற்றப்படும் தொப்புள் கொடி பாகங்கள் அகற்றுதல் 2024/2025 | விடயதானத்துடன் சம்பந்தப்பட்ட 03 வருட அனுபவம் | 10,000.00 |
| 03 | THR/E19/Cold Room/2024 | மருந்துக் களஞ்சியத்தின் குளிர் அறையின் வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கை | விடயதானத்துடன் சம்பந்தப்பட்ட 05 வருட அனுபவம் | 10,000.00 |
| 04 | THR/E19/AC/SE/2024 | வருடாந்த வளிச்சீராக்கி இயந்திரம் பராமரித்தல் மற்றும் சேவை உடன் படிக்கை | CIDA - EM 04 பதிவு மற்றும் குறித்த துறையில் 05 வருட அனுபவம் | 50,000.00 |
| 05 | THR/E17/PA07/2024 | தரவு நிலைப்படுத்தல் அலகிற்கான கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | CIDA - C7 | 81,000.00 |

- ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்கும் வேறுவேறாக ரூ.3500.00 மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத் தொகுதிகளை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்வி ஆவணங்களை 2024.04.26 முதல் 2024.05.28 வரை அலுவலக நாட்களில் (அரச பகிரங்க விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படும்.
- அரச ஒப்பந்தங்கள் மற்றும் வழங்கல் நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
- ஒரு கேள்விதாரருக்கு மேற்படி கேள்வி இலக்கங்கள் எந்த அளவிற்கும் கேள்விகளை சமர்ப்பிக்க முடியும் எனினும் அதற்காக வேறுவேறாக காசு செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். (மாற்றுக் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது)
- பொறியிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
- கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.05.29 மு.ப. 10.30 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன் அதன் பின்னர் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் ஏற்கப்படமாட்டாது.
- 2024.05.29 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
- கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் / கோவை இலக்கத்தை கீழ்க்காணுமாறு குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

  உ +ம் : 'THR/FBA/GEN/01/2024'

- எந்த கேள்வியையும் அல்லது அதன் ஒரு பகுதியை எந்தக் காரணமும் கூறாமலேயே ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.
- அநாவசிய தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருவதற்கு முன்பு தயவு செய்து 045 - 2224490 இலக்கம் மூலம் கணக்காளரை அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு.**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
+94 112429342
+94 112429343

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலையில் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.04.26 மு.ப.9.00 முதல் 2024.05.16 பி.ப.2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூபா 4000.00 ஐ வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்களை வைத்தியசாலையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இரு பிரதிகளுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2024.05.17 மு.ப.10.00 இற்கு முன்பு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளல் இட்டு அவ் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு தனி உறைகளில் உள்ளிட்டு, அவ் உறையின் இடதுபக்கம் வேலை விடயத்தின் பெயரை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பதிவுத்தபாலில் அனுப்பப்படும் கேள்வி ஆவணங்கள் 2024.05.17 மு.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும் அத்துடன் அன்றே மு.ப.10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் ஒப்பந்தக்காரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

| | வேலை | அடிப்படை செலவு மதிப்பீடு (மில்லியன்) | ஒப்பந்த கால எல்லை | குறைந்தபட்ச தகைமைகள் | தேவைப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரூ. | கால எல்லை |
| 01 | வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தின் மேல் மாடியில் ஸ்லெப் இற்கிடையில் உள்ள இடைவெளிகளில் கீழ் மாடிக்கு நீர் கசிவறை ஒழுங்குபடுத்துதல் | 1.63 | 90 நாட்கள் | C9 | 29,000.00 | 2024.08.01 |
| 02 | Virology Lab தீந்தை பூசுதல் | 0.46 | 30 நாட்கள் | C9 | 10,000.00 | 2024.08.01 |
| 03 | D விசேட தரத்திலான தாதியர் அலுவலகத்தின் பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளல் | 0.4 | 30 நாட்கள் | C9 | 10,000.00 | 2024.08.01 |

பெறுகைப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு, தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்கள்/விலைமனுவிற்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை/பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து மற்றும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மீளளிக்கப்படாத விலைக்கோரல்/ கேள்வி ஆவணங்களின் கட்டணம் | விலைக்கோரல் பிணை முறியின் / பாதுகாப்பு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | CPD/17/0521/2024 | நவீனமயமாக்கப்பட்ட ஆயுர்வேத ஔடதங்களின் கொள்வனவு | இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளுக்கான அனுபவத்தையும் வியாபார பதிவை வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் கொண்டிருத்தல் வேண்டும். | 5,900 ரூபா | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 2. | CPD/22/0441/2024 | அச்சடிக்கப்பட்ட படிவங்களின் கொள்வனவிற்கான விலைமனுக்கள் | | 5,900 ரூபா | 75,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 3. | CPD14/0720/2024 | பிவிசி அம்சங்கள் (குழாய்கள், இணைப்புக்கள், கரையும் சீமெந்து இன்னும் பல) 06 மாத கால எல்லைக்கான வழங்கலுக்கான விலைமனுக்கள் | | 5,900 ரூபா | 250,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 4. | CPD21/993/2024 | பயணிகள் பஸ்சிற்கான வாடகைக்கு அமர்த்துவதற்கான வாடகை விகிதாசார விலைமனுக்கள் (41 ஆசனங்கள், வளிச்சீராக்கலற்றது) | | 5,900 ரூபா | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 5. | CPD09/0734/2024 | பலகை, ஒட்டுப்பலகை தாள்கள் மற்றும் கதவுகள் ஆகியவற்றின் வழங்கலுக்காக 6 மாத கால எல்லைக்கு விகிதாசார விலை கேள்விகளை அழைத்தல் | | 5,900 ரூபா | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 6. | CPD10/828/2024 | பெயிண்டுகள் மற்றும் தொடர்புள்ள பொருட்களின் வழங்கலுக்காக 6 மாத கால எல்லைக்கு விகிதாசார விலை கேள்விகளை அழைத்தல். | | 5,900 ரூபா | 100,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 7. | CPD10/932/2024 | மின்சார அம்சங்களின் வழங்கல் | | 5,900 ரூபா | 200,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 8. | CPD03/0706/2024 | 06 மாத கால எல்லைக்கு உருக்கு பொருட்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான விகிதாசார விலை கேள்விகளை அழைத்தல் | | 5,900 ரூபா | 200,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 9. | CPD14/1111/2024 | சீமெந்தின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் இறக்கல் ஆகியவற்றிற்கான விலைக்கேள்விகள். | | 5,900 ரூபா | 400,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

I. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் முறையில் செலுத்தலாம்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04,
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
  மாளிகாகந்த, கொழும்பு 10.

II. பற்றுச்சீட்டு/ வங்கி வரவுத் துண்டின் மூலப்பிரதியானது கேள்வி/ விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைக்கப்படல் வேண்டும்.

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை **வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.05.15 ஆம் திகதி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.**

ஆ. கேள்வி /விலைமனுக்கோரல் ஆவணங்கள் **2024 மே 15 ஆம் திகதி பி.ப. 3 மணிக்குப் பின்** வழங்கப்படமாட்டாது/ இணையதளத்திலும் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.10.13 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், **செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024 மே 16 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.**

உ. 2024 மே 16 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்விகள்/விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 0112-686389, 0112-686369, 0112-662329.

ஊ. கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் கேள்விகள் / விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின், 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்தலின் பின் PCA (3) ஐ சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

# விலைமனுக்கோரல்

## இலங்கை நில அளவைத் திணைக்களம்
## மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வடக்கு மாகாணம்
## பெறுகைகள் - 2024

**விலைமனு இலக்கம் - PSG/NP/Acc7/Procurement/2024/007 & 008**

வட மாகாண நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் பின்வரும் பட்டியலிடப்பட்ட சேவைகளின் பெறுகைகளுக்காக சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| தொ. இல. (1) | சேவைகள் (2) | அளவு (3) | விலை மனுப் பிணை(ரூ) (4) | விலைமனு ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித்திகதி மற்றும் நேரம் (5) | விலைமனுக் கோரல்கள் திறக்கப்படும் நேரம் மற்றும் திகதி (6) | விலை மனுக்கான முன் ஒன்றுகூடல் இடம்பெறும் நேரம் மற்றும் திகதி (7) |
|---|---|---|---|---|---|---|
| 01 | வட மாகாண நில அளவையாளர் அலுவலகத்தின் கீழுள்ள மாகாண அலுவலகம் மற்றும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்கள் மற்றும் சகல பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கான பாதுகாப்புச் சேவையினை பெற்றுக்கொள்ளல். | 2024.06.01 - 2024.12.31 | 75,000.00 | 2024.05.17 ஆம் திகதி மு.ப. 9.30 | 2024.05.17 ஆம் திகதி மு.ப. 9.35 | 2024.05.06 ஆம் திகதி மு.ப. 10.30 |
| 02 | வட மாகாண நில அளவையாளர் அலுவலகத்தின் கீழுள்ள மாகாண அலுவலகம் மற்றும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்கள் மற்றும் சகல பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கான சுத்திகரிப்புச் சேவையினை பெற்றுக்கொள்ளல். | 2024.06.01 - 2024.12.31 | 75,000.00 | 2024.05.17 ஆம் திகதி மு.ப. 10.00 | 2024.05.17 ஆம் திகதி மு.ப. 10.05 | 2024.05.06 ஆம் திகதி மு.ப. 11.30 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிமிகுந்த விலைமனுக்கோரல் செயல்முறையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும்.
3. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள், வட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் உதவிப்பணிப்பாளர் (நிதி) அவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், குடியிருப்பு, வவுனியா எனும் முகவரியில் கடமை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை விலைமனு கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
4. அந்தந்த சேவைகளிற்கான விலைமனுக்கோரும் முழுமையான ஆவணத் தொகுதியையும் விண்ணப்பப்படிவத்தையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரம் ரூபா (ரூ. 1000.00) வைச் செலுத்துவதன் மூலம் 2024.05.16 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரை அலுவலக நேரத்தில் வழங்குநர்களால் வட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் உதவிப்பணிப்பாளர் (நிதி) அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி 024-2227736)
5. விலைமனுக்கான முன் ஒன்றுகூடலானது (Pre Bid Meeting) மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 07 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டு உள்ள திகதி மற்றும் நேரத்தில் **வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரதேச நில அளவை அலுவலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில்** இடம்பெறும்.
6. இரு பிரதிகளாக தயாரிக்கப்பட்ட விலைமனுப் பத்திரம் உள்ளிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் மேற்குறிப்பிட்ட 02 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை குறிப்பிட்டு விலைமனு உள்ளடங்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையானது மேற்குறிப்பிட்ட 05 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டு உள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு கிடைக்கக்கூடிய விதமாக **மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், குடியிருப்பு, வவுனியா** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும். தாமதமாகிக் கிடைக்கப் பெறுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 06ஆம் நிரலில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனு சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள முடியும். சகல விலைமனுக்களும் மேற்குறிப்பிட்ட அட்டவணையின் 04 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணைக் கட்டணங்களையும் (Bid Security) செலுத்தியிருத்தல் வேண்டும்.
8. சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுவானது 2024.08.25 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. சேவைக்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு மாத (01) காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட சேவைகள் வழங்கப்படல் வேண்டும்.

**மாகாண நில அளவையாளர் நாயகம்,**
**மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,**
**வடக்கு மாகாணம்,**
**குடியிருப்பு, வவுனியா.**
**தொலைபேசி / தொலைநகல் - 024-2227438**
**2024.04.26**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/04/002 | Desktop Computer (15) 46 Nos. | 98,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/05/053 | 20 Nos. CR6022J Chain Coupling for Mitsui - Paccco STS Cranes and SHI RTG Cranes at JCT & ECT Yards | 20,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/08/053 | Marine Paint and Thinner | 40,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/10/052 | Spares for the Terberg Terminal Tractors | 19,500.00 | 1,000.00 | 2024.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/10/047 | Construction materials for civil stores building | 500,000.00 | 12,500.00 | 2024.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஏப்ரல் 26 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**